ISSN: 2012 - 6352

# தொண்டன்

சமய – சமூக – இலக்கிய வெளியீடு

ஆரம்பம் 1969 பெப்ரவரி

40/=



"தவக்காலம் இது தவக்காலம்
வாழ்வினை வழங்கும் தவக்காலம்"

மார்ச் 2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

மார்ச் - 2014


மலர் - 46 இதழ் - 02

- **ஆசிரியர்**
  லெஸ்லி ஜெயகாந்தன்
- **இணை ஆசிரியர்**
  மலர்வேந்தன்
- **துணை ஆசிரியர்கள்**
  மெற்றில்டா இராஜேந்திரம்
  பெஸ்லீயோ வாஸ்
  பைந்தமிழ்க்குமரன் டேவிட்
- **ஆலோசகர்**
  A.G.இராஜேந்திரம்
- **கணினி வடிவமைப்பு**
  சுபாஜெனி சங்கர்
- **வெளியீடு**
  சமூகத் தொடர்பு நிலையம்.
  மட்டக்களப்பு மறை மாவட்டம்
- **முகவரி**
  சமூகத் தொடர்பு நிலையம்
  அ.பெ.எண் - 44
  மட்டக்களப்பு.
- **பதிப்பகம்**
  வணசிங்கா அச்சகம்
  மட்டக்களப்பு.


## உள்ளே....




அன்புடன் உங்களோடு .................. 01

தவக்காலம் .................. 02

கடுகுக் கதை .................. 04

இயேசுவின் சீடர் தோமை .................. 05

இயேசுசபைத் துறவி .................. 06

எண்ணிப் பார்க்கையில் .................. 07

கடலை ஆச்சி .................. 08

திருநீற்றுப் புதன் .................. 10

மாணவர் பக்கம் .................. 12

உறுதிகொண்டு முயன்று .................. 13

தீர்க்க தரிசனங்களின் .................. 14

தொண்டனின் சில .................. 16

கண்கள் திறக்க ஒருநாள் .................. 18

சூனியப் புள்ளிகள் .................. 20

வீட்டு மருத்துவம் .................. 23

புனிதர்களை அறிவோம் .................. 24

மனமாற்றம் .................. 26

விவிலியம் கற்போம் .................. 27

அறிவை வளர்ப்போம் .................. 28


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com


விலை : 40/=

ஆண்டு சந்தா : 450/=

(தபாற் செலவு உட்பட)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு....

தவக்காலம் இறையருளின் காலம், மகிழ்வின் காலம், மனம் வருந்தி, மனம்மாறி புதிய வாழ்வு வாழ நம்மை அழைக்கும் காலம்.

"அப்பா வானகத்திற்கு எதிராகவும்
உமக்கு முன்பாகவும் குற்றம் செய்தேன்"
(லூக் 15:21)

என்று கூறிய ஊதாரி மகனைப்போல் இறைவனிடம் நாம் திரும்பி வரவேண்டிய காலம். இறைவனின் அளவிட முடியாத அன்பைச் சுவைத்துப் பார்க்க நம்மை அழைக்கிறது இந்தத் தவக் காலம். நோன்பிருந்து, செபம் செய்து, இறைவனின் இரக்கத்தைப் பெற கொடுக்கப்பட்டுள்ள சிறப்பான காலம்.

ஏன் திருநீற்றுப் புதன்? எதற்காகச் சாம்பல்? வெறுமையின், ஒன்றுமில்லாமையின் அடையாளம்; பொறுப்பில்லாமல் சுற்றித் திரியும் மனிதனுக்கு அவனது நிலைமையை சுட்டிக் காட்டி, அவனில் அடக்கத்தையும், தாழ்ச்சியையும் கொண்டுவருகின்றது இந்த நாள்.

சாம்பல் துக்கத்தின் அடையாளமாகவும், மனமாற்றத்தின் அடையாளமாகவும் இருக்கின்றது. தாமார், மார்தொக்காய் ஆகிய இருவரும் துக்கத்தை வெளிப்படுத்த தங்கள் மீது சாம்பலைத் தூவிக்கொள்கிறார்கள். (2 சாமு 13:19, எஸ்தர் 4:1)

நினிவே மக்கள் மனம் திரும்பி வருவதன் அடையாளமாகச் சாம்பலில் அமர்கின்றனர்.
(யோனா 3:6)

(தொ.நூ 3:19) "மனிதனே நீ மண்ணாக இருக்கின்றாய். மண்ணுக்கே திரும்புவாய் என்பதை நினைத்துக்கொள்" என்று கூறப்படுகின்றது.

இதை நினைவில் கொள்ளாத மனிதர் தம்முடைய வாழ்க்கையின் நிலையாமையை உணராமல் இன்று, பதவி, பட்டம், ஆசனத்தின் ஆசைகளைத் தக்கவைத்துக்கொள்ளப் போட்டி போட்ட வண்ணம் இருக்கின்றனர். இதனால் கொலை, கொள்ளை, லஞ்சம், ஊழல் போன்றன இன்னும் தலைவிரித்தாடிக்கொண்டு இருக்கின்றது.

மனிதன் தன் நிலையை உணர்ந்துகொள்ள வேண்டும். சாம்பலைப் போல் தன் வாழ்வு ஒன்றுமில்லை என்பதை உணர்ந்து இந்த உலகில் வாழும்போது அன்பு செய்து, அரவணைத்து, பகிர்ந்து வாழ்ந்து, செபம் செய்து, இறைவனோடு தன்னை ஒப்புரவாக்கிக் கொள்ள, தன்னைத் தயார்படுத்திக்கொள்ள இத் தவக்காலம் நம் ஒவ்வொருவரையும் அழைத்து நிற்கின்றது.

நம் முன்னால் வாழ்வின் வழியும், சாவின் வழியும் வைக்கப்பட்டுள்ளன. எதை நாம் தேர்ந்தெடுக்கப்போகின்றோம்? கடவுளின் கட்டளைகளைக் கடைப்பிடித்தால் வாழ்வின் வழி நமக்கே உரித்தாகும்.

சுவாமி விவேகானந்தர் சொல்கிறார் :

"வலிமை கொடுங்கள் எனக் கேட்டேன்
அவர் கொடுத்ததோ நெருக்கடியான சூழ்நிலைகள்
அறிவு கொடுங்கள் எனக் கேட்டேன்
அவர் கொடுத்ததோ வாழ்வின் புதிர்கள்
மகிழ்ச்சி கொடுங்கள் எனக் கேட்டேன்
மகிழ்ச்சியற்ற மனிதர்களை அறிமுகப்படுத்தினார்.
நான் விரும்பியது எதையும் கடவுள் கொடுக்கவில்லை
ஆனால், எனக்குத் தேவையானவை எல்லாவற்றையும்
அவர் கொடுத்தார்"

நம் கடவுள் நம்மீது அன்புகொண்டவர். பாவிகளாகிய நம்மை மன்னித்து அரவணைத்து அனுதினமும் தம் அன்பால் வளர்ப்பவர். நம் தேவையை அறிபவர் நம் தந்தை. எனவே, நம்பிக்கையுடன் தேடுவோம், தட்டுவோம், கேட்போம், அவர் எல்லாவற்றையும் தருவார்.

சோதனை இன்றி சாதனை இல்லை
வேதனை இன்றி உயர்வு இல்லை
தேவனை நம்பும் மானிடர் மட்டும்
சோதனை கடந்து சாதனை படைப்பர்

- ஆசிரியர் -

**இறைவார்த்தை**

"ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையால் பலர் பாவிகளானதுபோல், ஒருவரின் கீழ்ப்படிதலால் பலர் கடவுளுக்கு ஏற்புடையவர்கள் ஆவார்கள்"

(2 Cor : 5:19)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தவக்காலம்

பணி. ஜா. அலெக்ஸ் ராசா, ச.ச. திண்டுக்கல்.



கிறிஸ்தவர்களுக்கு தவக் காலம் மிகவும் முக்கியமான ஒரு காலம். சாம்பல் புதன் தொடங்கி உயிர்ப்பு பெரு நாள் வரை இந்தத் தவக்காலம் அமைகிறது. கிறிஸ்தவர்கள் தாங்கள் வாழும் வாழ்க்கையை அலசி ஆராய்ந்து பார்த்து, அவ் வாழ்வில் உள்ள குறைகளை, தீமைகளை, பாவங்களை எல்லாம் எண்ணி, மனம் வருந்தி இறைவனிடம் மன்னிப்பு வேண்டும் ஒரு புனிதமான காலம். இவ்வாறாக வாழ்வை அலசி ஆராய்ந்து பார்க்க செபமும், தவமும் உதவி புரிகின்றன.

**தவம்** - இது எல்லா மதத்தினருக்கும் பொதுவானது. இந்து சமயத்தில் விரதம் இருப்பார்கள். இஸ்லாமியர்கள் ரமலான் நோன்பு இருப்பார்கள். புத்தர்களும் 'போயா' என்றழைக்கப்படும் பௌர்ணமி நாட்களில் உண்ணா நோன்பு இருந்து செபிப்பார்கள். உணவைக் குறைத்து உடலை வருத்தும்போது தான் ஒருவன் தன்னிலை உணர்வு பெறுகிறான். அதுபோலவே, இத்தவக்காலத்தில் கிறிஸ்தவர்கள் தாம் வாழும் வாழ்க்கையை உணர்ந்து அறிந்திட உண்ணாநோன்பு இருக்கிறார்கள்.

மதச் சட்டங்களின்படி குழந்தைப்பருவம் தாண்டியவர்கள், முதுமை மற்றும் நோயினால் வருந்தாதவர்கள், வருடத்திற்கு இரண்டு நாட்கள், அதாவது சாம்பல் புதன் மற்றும் பெரிய வெள்ளிக்கிழமைவரை கட்டாயம் உண்ணா நோன்பு இருக்க வேண்டும். ஆனாலும் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும், இன்னும் சிலர் இத் தவக்காலத்தின் நாற்பது நாட்களும் உண்ணா நோன்பு இருப்பார்கள்.

**செபம்** - கடவுளோடு மனிதனை இணைப்பது செபம். கடவுளை மட்டுமே நினைத்து, கடவுளே கதி என்ற நிலையில் தனது துன்பம், நோய், வருத்தம் எல்லாவற்றையும் அழுகையோடு கடவுள் முன் முறையிடுவது ஒரு வகையான செபம். துன்பம் சூழ்ந்த நிலையில் எல்லா மனிதருக்கும் இயல்பாக எழக்கூடிய ஒரு நிலை தான் இவ்

வகையான செபம். இன்பமோ துன்பமோ, மகிழ்ச்சியோ அழுகையோ எல்லா மனநிலை யிலும், எல்லாச் சூழ்நிலைகளிலும் கடவுளை நினைத்துத் தியானிப்பது வேறு வகையான செபம்.



செபம் செய்கின்றபோது வாழ்வின் ஓட்டத்தில் அலைபாயும் மனதை ஒருமுகப்படுத்தி, தனது வாழ்வை நினைத்து, அதையே கடவுள் முன் பலியாக, படையலாகப் படைத்து அருள்வரம் பெறுகிறோம். அந்த அருள்வரம் மனிதனை மனிதனாக வாழச்செய்யும். ஏன், மனிதரைத் தெய்வமாகவே மாற்றும். அதைத்தான் முக்தி நிலை என்பர். மனித வாழ்வில் எதிர்கொள்ளும் துன்பங்களை, பிரச்சினைகளை எதிர்கொள்ள அந்த அருள்வரம் உதவுகிறது. பிரச்சினை, துன்பங்களிலிருந்து விடுபட்டு மகிழவும், நிறைவுதரும் வாழ்வை வாழவுமே எல்லா சமயத்தவரும் விரும்புகின்றனர். அத்தகைய வாழ்வை எதிர்நோக்கியே கடவுளை நினைக்கின்றனர்; புனித தலங்களுக்குப் பாத யாத்திரை செல்கின்றனர்.

இந்த அருள்வரம் செபம் மற்றும் தவத்தின் மூலமாக நமக்குக் கிடைக்கிறது. நாம் பகிர்வது பணமோ, உணவோ, வேறேதும் பொருளோ என்றாலும், உண்மையில் பகிரப்படுவது மகிழ்வும், நிறைவும்தான். "பெறுவதில் அல்ல கொடுப்பதில் தான் உண்மையான மகிழ்வு உள்ளது" என்று இயேசு கூறுகிறார்.

மனித வாழ்வுக்குத் தேவையான அருள்வரங்களை கடவுளிடமிருந்து நிறைவாகப் பெற செபம், தவம் உதவுகிறது. கடவுள் தன்மையோடு விளங்கிய இயேசுக் கிறிஸ்து, மனிதராக அவதரித்து, மனிதர்களால் தவறாகத் தீர்ப்பிடப்பட்டு, கொடூரமான சிலுவைச் சாவின் மூலந் தான் தீமையின் மீதும், பாவத்தின் மீதும் வெற்றிகொண்டார், மூன்றாம் நாள் உயிர்பெற்று எழுந்தார் என்பது கிறிஸ்தவர்களின் நம்பிக்கை. இந்தத் தவக்காலத்தில் கிறிஸ்தவர்கள் தியானிக்கும் இயேசுவின் பாடுகள், மரணம் இவற்றை அடையாளப்படுத்துவது சிலுவை. இது கிறிஸ்தவர்களுக்கு ஒரு முக்கியமான சின்னம். பாவ வாழ்வில் மீட்பின் சின்னம் அது.

ஆகவேதான் எல்லாக் கிறிஸ்தவ தேவாலயங்களிலும் இச் சிலுவை முக்கியமான இடத்தைப் பெறுகிறது.

இயேசுவின் வாழ்வு சிலுவை மரணத்தோடு முற்றுப் பெறவில்லை. இயேசு உயிர் பெற்று எழுந்ததால்தான் இன்றும் கிறிஸ்தவ மதம் வாழ்கிறது. அந்த உயிர்ப்பையும் எடுத்துக் காட்டும் விதத்தில் வித்தியாசமான சிலுவையை வடிவமைத்து மக்களின் பக்தியை தூண்டும் வண்ணம், தமிழ்நாடு, திண்டுக்கல் நகரத்தில் சவேரியார் பாளையம், தூய சவேரியார் ஆலயத்தில் வழிபாட்டுக்கு வைக்கப்பட்டுள்ளது. ஒன்பது அடி நீளத் தில், ஆறு அடி அகலத்தில் முற்றிலும் மரத்தால் ஆன இந்தப் பெரிய சிலுவையை இங்கு தவிர உலகில் வேறெங்கும் காண இயலாது.

எந்தக் கடவுளும் செத்த கடவுள் அல்ல. செத்த கடவுள் மனிதனை வாழ வைக்க இயலாது. கடவுள் காலங்களைக் கடந்து என்றும் வாழ்பவராக இருக்கிறார். வாழுகின்ற கடவுள் மனிதர்களையும் வாழச்செய்கிறார். இந்த நல்ல செய்தியை - இறப்பையும், உயிர்ப்பையும் ஒரு சேர எடுத்துக்காட்டுவதுதான் இந்த வித்தியாசமான சிலுவை. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# திருத்தந்தை பிரான்சிசின் முதல் மறைத்தூது அறிவுரை

## (இவான்ஜெலியி கவுதியும்)

பாப்பிறைப் பணியை ஏற்ற பிறகு கடந்த எட்டு மாதங்களில் தான் வழங்கிய மறையுரைகள், உரைகள், நேர்காணல்கள் ஆகியவற்றில் வலியுறுத்திய அனைத்தையும் பரந்த அளவில் 'இவான்ஜெலியி கவுதியும்' அதாவது 'நற்செய்தியின் மகிழ்ச்சி' என்ற தன் மறைத்தூது அறிவுரை ஏட்டில் ஒன்றிணைத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். புறக்கணிப்பு, உலகமயமாதல், வருவாயில் மாபெரும் இடைவெளிகள் ஆகியவை நிறைந்த உலகில் திருஅவையின் நற்செய்தி அறிவிப்பு ஆர்வத்தை எவ்வாறு மீண்டும் உயிர்த்துடிப்புள்ளதாக்குவது என்பது குறித்து விளக்கியுள்ள திருத்தந்தை, கிறிஸ்தவர்கள் இறைவனின் மாறுபடா அன்புக்கும் மன்னிப்புக்கும் ஒவ்வொருநாளும் தங்கள் இதயத்தைத் திறக்குமாறும் கேட்டுள்ளார்.

பரவலான இலஞ்ச ஊழல், செல்வந்தரின் வரி ஏய்ப்பு, நிதி ஆதாயம் என அடிப்படையிலேயே அநீதியைக் கொண்டிருக்கும் தற்போதைய பொருளாதார அமைப்பைக் குறைகூறியுள்ள திருத்தந்தை, மதச் சுதந்திரம் வழங்கப்படாமை, கிறிஸ்தவர்க்கெதிரான அடக்குமுறைகள் ஆகியவற்றையும் இந்த 84 பக்க ஏட்டில் கண்டித்துள்ளார்.

கிறிஸ்தவர்கள் இஸ்லாம் குறித்த விரோத முற்சார்பு எண்ணங்களைத் தவிர்க்குமாறு கேட்டுள்ள அதேவேளை, இஸ்லாமிய நாடுகள் கிறிஸ்தவர்களுக்கு முழுச் சுதந்திரம் தரவேண்டுமென்றும் தாழ்மையுடன் கேட்டுள்ளார்.

திருஅவையில் ஆண்கள் மட்டுமே குருக்களாக இருக்கலாம் என்பதை உறுதிப்படுத்தியுள்ள அதேவேளை, அவர்களின் திருவருட்சாதன திருப்பொழிவு, பொதுவாக ஆதிக்கம் என்பதோடு நின்றுவிடக்கூடாது. திருஅவை வாழ்வின் பல்வேறு துறைகளில் தீர்மானம் எடுப்பதில் மகளிருக்கும் பங்களிக்க வேண்டுமெனவும் கேட்டுள்ளார்.

## கடுகுக் கதை 54

# முடிவு

**அ**ன்ரனின் மகன் ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று சிறப்புச் சித்தி பெற்றிருந்தான். அவர் அரசாங்க உத்தியோகம் செய்பவர் என்பதனால், புலமைப்பரிசில் பணம் கிடைக்க வாய்ப்பில்லை. ஆனால், கொழும்பில் உள்ள பிரபல பாடசாலைக்கு அனுமதி கிடைத்திருந்தது. இவனை அங்கு அனுப்புவதா அல்லது ஊர்ப் பிரபல பாடசாலையில் விடுவதா என்ற மனப்போராட்டம் அன்ரனுக்கிருந்தது.

அவர் அன்றைய செய்திப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தார். அந்தச் செய்தித் தலைப்பு அவரைக் கவர்ந்தது.

'தலைநகரப் பாடசாலைகளில் கணிசமான மாணவர்கள் போதைப் பொருள் பழக்கத்திற்கு அடிமையாகி உள்ளனர், ஆய்வில் கண்டுபிடிப்பு'

அன்ரன் மனைவியிடம் சொன்னார்,

"தம்பிய நம்மட ஊர்ப் பள்ளியிலேயே விடுவம்; பிள்ளை நம்மட கண்ணுக்குள்ள இருந்து வளரட்டுமே..."

தன் முடிவில் தானே திருப்திப்பட்டுக்கொண்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பொதுவாக, நவீன வரலாற்று ஆசிரியர்கள் - கிறிஸ்தவ வரலாற்று ஆசிரியர்களும் கூட கி.பி. 15ம் நூற்றாண்டிலிருந்துதான் கிறிஸ்தவம் தமிழ் நாட்டில் பரவியது என்ற முடிவினைக் கொண்டுள்ளனர். ஆனால், இயேசுவின் அப்போஸ்தலரான புனித தோமையார் சென்னை மயிலாபூருக்குச் சமயம் போதிக்க வந்த வரலாறு- ஐதீகம்- பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

இயேசுவின் அப்போஸ்தலர்களில் முக்கியமான ஒருவர் புனித தோமையார். "இயேசு வின் விலாவில் ஈட்டியால் குத்தப்பட்ட ஓட்டையில் விரலைவிட்டுப் பார்த்தால்தான் இயேசு உயிர்த்தார் என்பதனை நம்புவேன்" என்றவர். இயேசு அவருக்குக் காட்சி கொடுத்து அவரை விசுவாசத்தில் உறுதிப்படுத்தினார்.

இதையடுத்து தோமையார் எகிப்துக்குச் சென்று மேலும் விசுவாசத்தில் உறுதி பெற்றிருக்க வேண்டும். 1945ல் நாக்ஹமாதி குகையில் கண்டுபிடிக்கப்பட்ட பப்பிரஸ் நூல்க ளுள் ஒன்று 'தோமஸ்' என்ற அப்போஸ்தலரால் எழுதியதாக நம்பப்படுகின்றது. புனித தோமஸ் பின்னர் எகிப்து அலெக்சான்றியாவிலிருந்து இந்தியாவின் தற்போதைய தமிழ் மாநிலங்களுக்கு வந்திருக்கக்கூடிய சாத்தியக் கூறுகளும் வசதி வாய்ப்புகளும், அரசியற் மொழி, சமூகவியற் சூழ்நிலைகளும் சாதக நிலைமைகளைத் தோற்றுவித்துள் என என்பதற்கு வரலாறு, புதைபொருள் மற்றும் இலக்கியச் பொருளாதார, சான்றுகள் நிறைவாக உள்ளன.

புனித தோமையாரின் மறைநிலை வதிவிடம், அவர் பெயர் தாங்கும் சாந்தோம் மலை என்பன வரலாற்றுச் சான்றாக விளங்குகின்றன. அவரது கல்லறை சென்னை மைலாப்பூர் மெரினா கடற்கரையில் அமைந்துள்ள சாந்தோம் பேராலயத்தில் உள்ளது.

அக்காலத்தில் உயிராபத்துக்குப் பயந்து புதுமறை போதிப்போர் இரகசியம் பேணும் அவசியம் ஏற்பட் டது. புதுமறையின் முக்கிய போதனைகளான இயேசு அரசர், அவர் உயிர்த்தெழுந்தார், அவரது அரசிற்கு முடிவு இராது என்பன போன்ற கருத்துகள் அரசர்களைக் கலங்க வைத்திருக்க வேண்டும். யூதர்க ளின் அரசர் பிறந்துள்ளார் என்ற சேதி கேட்டு ஏரோது கலங்கினான் என்பது இங்கே நினைவு கூரத்தக்கது. இது போன்றே அக்காலத் தமிழக அரசுகளும் புதிய, முடிவில் லாத, உலகியல் அரசுபற்றிய போதனைகளைக் கேட்டு திகிலடைந்திருக்க வேண்டும். இதனால் தோமையாரும் அவரது சீடர்களும் தமது போதனையில் புதிய அணுகு




# தோமையாரின் தென்னிந்திய வருகை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முறைகளைக் கொண்டிருக்க வேண்டும்.


தோமையாரின் தென்னிந்திய வருகைக்கும் அவரது பணிகளுக்கும் பல்வேறு புறச்சான்றுகளும் உள்ளன. சேர மாநிலத்தில் (தற்போது இது கேரள மாநிலம்) ஆட்சி புரிந்த 37 யவன - கிரேக்க அரசர்களது அரசாட்சி, உரோமர்களோடு தென்னிந்தியர்களுக்கு இருந்த வணிகத் தொடர்பு, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் கண்டெடுக்கப்பட்டுள்ள உரோமை நாணயங்கள், பெரிப்புளுஸ், தொலமி போன்ற வரலாற்று ஆசிரியர்களின் குறிப்புகள் எனப் பல்வேறு சான்றுகள் தோமையாரின் தென்னிந்திய வருகையை உறுதிப்படுத்துகின்றன.

இயேசுவினால் ஆட்கொள்ளப்பட்ட தோமையார் எகிப்தில் அலெக்சான்றியாவில் மன்னன் மகா அலெக்சான்டரினால் உருவாக்கப்பட்ட நூற்களஞ்சியத்தில் மேலும் தம் ஞானத்தை வளர்த்து, கிரேக்க மொழியிலும் பாண்டித்தியம் பெற்று, சேர நாட்டை ஆண்ட கிரேக்க அரசர்களால் விவிலியப் போதனைகளுக்குக் கால்கோளிடப்பட்ட சேர நாட்டினூடாக சோழ நாட்டிற்கும், மைலாப்பூருக்கும் வருகைதர அவருக்கு இச் சூழ்நிலைகள் இடமளித்திருக்க வேண்டும்.

"கர்மயோகி பவுல்"
*அருள்சகோ. கலாநிதி.*
**எஸ் ஏ. ஐ. மத்தியு**



# இயேசுசபைத் துறவி
# அருட்தந்தை ஹரல்ட் ஜோன் வெபர் அடிகள்



*மட்டக்களப்புப் பிரதேசத்தையும் உள்ளடக்கியதான திருகோணமலை மறை மாவட்டம் 1895 இல் உருவாக்கப்பட்டபோது அது முற்றிலுமாய்ச் யேசுசபைத் துறவிகள் வசம் ஒப்படைக்கப்பட்டது. அந்தவேளையில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த யேசுசபையினர் இங்கு வந்து பதிய மறைமாவட்டம் உருப்பெற தன்னலம் கருதாது பணியாற்றினர். ஆயிரக்கணக்கான பிரெஞ்சு யேசு சபைத் துறவிகள் இரண்டு உலக மகா யுத்தங்களின் போதும் போர்க்களத்திலும், தத்தம் பகுதிகளிலும் பொதுமக்களுக்கும், இராணுவ வீரர்களுக்கும் ஆன்மீகப் பணியோடு சமூகப் பணியையும் ஆற்றி வரும் வேளையில் தம் உயிரை இழந்தனர். இதனால் தொடர்ந்தும் இலங்கையில் பணியாற்றப் போதிய குருக்களைப் பிரான்ஸ் நாட்டினின்றும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.*

*இதனால் அமெரிக்காவின் நியூ ஆர்லியன்ஸ் மாநிலத்தைச் சேர்ந்த இளம் துறவிகள் தம் மத்தியில் விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்து இலங்கை வரச் சம்மதம் தெரிவித்து, குறிப்பாக காலி, திருகோணமலை, மட்டக்களப்புப் பகுதிகளில் தமது அன்புப் பணியைத் தொடங்கினர். எமது மண் செய்த புண்ணியம் அருட்தந்தை ஹரல்ட் ஜோன் வெபர் அடிகள் 1947 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மண்ணில் காலடி பதித்துத் தன் இறுதி மூச்சுவரை ....*

- தொடர் 25ம் பக்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எண்ணிப்பார்க்கையில்...

• ஆனந்தா ஏ. ஜி. இராஜேந்திரம்

நம்மில் பலருக்கும் விரும்புவது கிடைப்பதில்லை;
விரும்பியதுபோல் நடப்பதில்லை என்கின்ற
வருத்தமும், ஏக்கமும் எப்போதுமே நிறைய உண்டு!
நினைப்பதுபோல் நடப்பதென்றால் எல்லாமே
எல்லையின்றிப் போய்விடும்!
கவிஞர் சொன்னார்:
"நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்
தெய்வம் ஏதுமில்லை
நடந்ததையே நினைத்திருந்தால்
அமைதி என்றுமில்லை"
மணியான வார்த்தைகள்
மண்டைக்குள் மணியடிக்கும் வார்த்தைகள்!!
பலருக்கும் ஒன்றை எண்ணிவிட்டால் போதும்;
ஒன்றை விரும்பிவிட்டால் போதும்
அது கிடைத்துவிடவேண்டும் என்ற எண்ணம்
மனதுக்குள் இருக்கிறது.
ஆனாலும், நாம்
தெளிவாக எண்ணிப்பார்க்கையில்
மனமும் தெளிவுகாண்கிறது;
நாம் ஒருபோதும் விரும்பியவற்றைப் பெற்றுக்
கொள்வதில்லை;
எதை விரும்பி அதற்காக உழைக்கின்றோமோ
அதையே பெற்றுக் கொள்ளுகின்றோம்!
விருப்போடு உழைப்பும் சேரும்போது
நாம் ஆசைப்பட்ட எல்லாவற்றையும்
பெற்றுக் கொள்ளுகின்றோம்
என்பதுதான் உண்மை!!

03



அஞ்சலிப்பா

# எவர்க்கும் இனியவன், இன்புறப் பேசுவான்

புண்ணாகிப் போனதுளம் சேதிகேட்டு
புலனைந்தும் அடங்கியபோல் உணரலானோம்
கண்ணாகத் தமிழ்காத்த அன்புமணியைக்
காலன்தான் கைக்கொண்ட சேதிகேட்டோ
மண்ணிலுள தமிழ்மாந்தர் கண்ணீர் மல்க
உளமுருகி உன்புகழ் பாடுகின்றார்
புண்ணியங்கள் பலசெய்த அன்புமணி
புவியுள்ள நாள்வரை நெஞ்சிலுறைவார்.

**வேறு**

எவர்க்கும் இனியவன் ஏற்பா ரெலாரும்
எவரெவ ராயினும் இன்புறப் பேசுவான்
தவிக்கும் படியொரு சொல்லேனுஞ் சொல்லான்
மேவியே மேன்மை கூறுவான், மேலோன்
கவர்வதில் தனிச்சிறப் புடையவன் செம்மல்
எவர்க்கும் ஏற்றநல் லினியநூல்கள் படைத்தான்
செவிகுளிர செந்தமிழ் ஊற்றாய் ஓடும்
காவியச் சோலையில் கலைபல செய்தான்.

பொதுப்பணி செய்வதில் பெருமனங் கொண்டவன்
பொதுப்பணி களேற்று மன்றப் பணி புரிவோன்
தமிழ்மொழி யோங்கதன் னுயர்பங் கீந்தவன்
தமிழ்த்தாய் மகிழ்பணி செய்திடும் அன்புமணி
புன்னகை என்றுமே பூத்திடும் வதனமுன்
பொன்மனக் கண்ணாடி யாமோ என்சொல்வோம்
பல்கலையும் பகிர்ந்தே பல்துறைநூல் கள்படைத்த
பண்பான உமக்குச் சாவில்லை ஐயா!



✸ கலாபூஷணம். வயலற் சரோஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

குறுங்கதை - 02

# கடலை ஆச்சி

எந்தக் கோயிலில விசேட மென்றாலும் கடலைக் கிழவி கற்பகத்துக்குக் கொண்டாட்டந்தான்!

இந்த விசயத்தில் அவள் மதம் பார்த்துச் செயற்படுவதில்லை. தேவாலயமோ, பள்ளிவாசலோ, பௌத்த விகாரையோ, உற்சவம் என்று வந்தால் கேற்றடியில் முதல் ஆள் அவள்தான்.

விகாரை வாசலில் மட்டும் அவளுக்கு முன்னுரிமையில்லை. அங்கு தாமரை மொட்டுகளுக்கே அதிக முக்கியத்துவமிருக்கும் என்றாலும், அவளுக்கும் ஓரிடம் இருக்கத்தான் செய்யும்.

எங்கும், எவரும் தடுப்பதுமில்லை. வரி செலுத்த வேண்டிய அவசியமும் அவளுக்கில்லை. போன தடவை மாரியம்மன்

> “
> ‘நாசமறுப்பான்.... வெள்ளை வேட்டிக்கார னையும் வெளிவேசக் காரனையும் நம்பக் கூடாதென்பதை இவன் எனக்குச் சொல்லியி ருக்கிறான்......’

கோயிலடியில்தான் அவளுக்கு ஒரு புது அனுபவம் ஏற்பட்டது.

நாலைஞ்சு பொடியன்கள் வந்து நின்றான்கள். முன்னுக்கு வந்தவன்கள் பத்தோ இருபதுக்கோ வாங்கிக்கொண்டு நகர, கடைசியில் வெள்ளை வேட்டியும், திருநீறு சந்தனமுமாய் முகம் மினுங்க பொறுமையாய் நின்ற பொடியனைப் பார்த்து கிழவி முறுவலித்தாள்..

‘அதுகள் கோயில் முகப்புக்கே போகாமல் வந்து வடக்கு வீதியிலை இருந்து அரட்டையடிச்சுப்போட்டு கடலை கொறிக்க வந்திட்டுதுகள். இவன் மகராசனாட்டம் என்ன ஒரு பக்தியோட வேட்டியும் வெறும்





- வீக்கேயெம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மேலுமாக .... சீ, இப்பத்தையில் பொடியன்களோட இவனை ஒப்பிடவே ஏலாது......' என்று மனதுக்குள் வாழ்த்தியபடி கேட்டாள்,

"என்ன மேனை.... உனக்கு எவ்வளவுக்குத் தர....?"

"ஒரு நூறு ரூபாவுக்குத் தாவனெணை!"

புத்தம் புதுத் தாளொன்றை நீட்டினான்.

கிழவி முகமெல்லாம் பல்லாக மலர்ந்து மகிழ்ந்து போனவளாக இருபது ரூபாய்ச் சரையெடுத்து போடப்போன போது அவன் இடைமறித்தான்.

"என்னனணை.... ஒரு சொப்பிங்பாக் கூட வைச்சிருக்கமாட்டாய்.... அஞ்சு சரையளை எப்பிடிக் கொண்டுபோறது...? இந்தா வேட்டித் தலைப்பில போடு! அங்கால போய் பாக் ஏதும் வேண்டிப் போடுவம்....!"

அவன் வேட்டித் தலைப்பைக் கடலைத் தட்டுக்கு மேல் பிடித்தான். கிழவியும் வாய்க்குள் எண்ணியபடியே பத்து சுண்டளந்து போட்டாள். மேலும் ஒரு சுண்டளந்து சொன்னாள்.....

"இதுக்குக் காசு வேண்டாமப்பு.... கச்சான் வேண்டாமே ராசா....?"

"கச்சான் திண்டால் சீனி வருத்தம் வருமாமெணை"

"உதார்மேனை சொன்னது...? அந்த வருத்தமிருக்கிறவைதான் தின்னக்கூடாது. ஒரு இருபது ரூபாய்க்கு போடட்டே...?"

கிழவி வியாபாரத்தில் குறியாயிருந்தாள்.

"இல்ல... போதுமணை!"

திரும்பி நடந்தான். கிழவி அவனையே வைத்தகண் வாங்காமல் பார்த்தாள்...

"டேய், எல்லாரும் வாருங்கோடா.... கிழவியை நல்லாய்ப் பேய்க்காட்டிப் போட்டன். கீழாலை ரெண்டு சிறங்கை அள்ளிப் போட்டன்!"

மெதுவாகத்தான் சொன்னான், கிழவி தன்னையே பார்த்துக்கொண்டிருப்பது தெரியாமல்.

அவர்கள் இவனை அதிசயமாய்ப் பார்த்தார்கள். 'இந்தப் பூனையும் பால் குடிக்குமா' என்ற ஆச்சரியம்.

"நீ ஒரு பேய்க்காய்தான் மச்சான்"

என்று புகழாரம் வேறு.

பார்த்திருந்த கிழவிக்குப் பகீரென்றது. கிழவிக்குக் கூர்மையான காது.

'நாசமறுப்பான்.... வெள்ளை வேட்டிக்காரனையும் வெளிவேசக்காரனையும் நம்பக்கூடாதென்பதை இவன் எனக்குச் சொல்லியிருக்கிறான்......'

மனசுக்குள் திட்டியவாறே, "நில்லடா ராஸ்கல்" என்று அவள் எழும்பவும், "ஆச்சி, கடலை" என்று குரல் கேட்க அவள் அமர்ந்ததுதான் தாமதம், அவர்கள் மின்னலென ஓடி மறைந்தார்கள். ■

---

குறும்(புப்)பா – 127

## யதார்த்தம்

**தவக்காலம் வருமொவ்வோ ராண்டும்**
**பவக்கோலம் மாறமனந் தூண்டும்**
**தவமென்ன பவமென்ன தாவும்மனக் குரங்குக்குத்**
**தவனங்கொண் டோடுஞ் சுகந்தேடி...**

- மலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருநீற்றுப் புதன்



கிறிஸ்தவத்தின் முக்கியமான தினங்களைக் குறித்துப் பேசும்போது கிறிஸ்து பிறப்பு, புனித வெள்ளி, உயிர்ப்பு, விண்ணேற்பு, குருத்தோலை தினம் என விழாக்கள் நம்முடைய நினைவுக்கு வருகின்றன.

பெரும்பாலும் நம்முடைய நினைவுக்குள் வராத நாள் சாம்பல் புதன்.

**இந்தச் சாம்பல் புதன் என்றால் என்ன ?**
உயிர்ப்பு தினத்திற்கு முந்தைய (ஞாயிற்றுக் கிழமைகள் தவிர்த்த) நாற்பது நாட்களை கிறிஸ்தவர்கள் தவக்காலமாக அனுசரிக்கின்றனர். தவக்காலம் என்பது நம்முடைய தவறுகளை உணர்ந்து திருந்தவும், நம்மை நாமே அறிந்து நம்மை இறைவனின் வழியில் கொண்டு வரவும் தரப்பட்டிருக்கும் காலம் எனக் கொள்ளலாம்.

பழைய ஏற்பாடுகளில் எஸ்தர், தானியேல், யோபு ஆகிய நூல்களில் இத்தகைய நாற்பது நாள் தவத்தைக் குறித்த செய்திகள் காணக்கிடக்கின்றன. எனவே இது கிறிஸ்துவின் மறைவிற்குப் பின் கிறிஸ்தவர்களால் உருவாக்கப்பட்டது இல்லை என்பதும், பழைய வழக்கத்திலிருந்து பெறப்பட்டதே என்பதும் உறுதியாகிறது.

கி.பி 900 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதாகவும், முதலில் சாம்பல் தினம் என்று அழைக்கப்பட்டதாகவும் வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.
கத்தோலிக்கத் திருச்சபையில் அன்றைய தினத்தில் பாதிரியார் மக்களுடைய நெற்றியில் "மனிதனே நீ மண்ணாக இருக்கின்றாய், மண்ணுக்கே திரும்புவாய் மறவாதே" என்று கூறி சாம்பலினால் சிலுவை அடையாளம் வரைகிறார்.

இயேசு சிலுவை மரணத்தை சந்திக்கு முன் எருசலேமிற்குள் நுழைந்த தினத்தில் மக்கள் ஒலிவ மரக் கிளைகளை அசைத்து அவரை வரவேற்றார்கள். அந்த நாளே இன்றைய திருச்சபையில் "குருத்தோலை தினம்" எனக் கொண்டாடப்படுகிறது.



அன்றைய தினத்தை நினைவுகூரும் வகையில் மக்கள் குருத்தோலைகளைப் பிடித்து பவனிகள், கொண்டாட்டங்களில் ஈடுபடுகிறார்கள். அன்றைய தினத்தில் ஆலயக் கொண்டாட்டங்களில் பயன் படுத்தப்படும் ஓலையே அடுத்த ஆண்டு எரித்து சாம்பலாக்கப்பட்டு, "சாம்பல் புதன்" தினத்தில் நெற்றியில் பூசப் பயன்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பழைய ஏற்பாட்டில் மக்கள் தங்கள் பாவங்களை நினைத்து மனம் கசிந்து சாம்பலை உடலெங்கும் பூசி மேனி அழகைக் குறைத்துக் கொண்டும், கோணியை ஆடையாய் உடுத்தி ஏழ்மைக் கோலம் பூண்டும், தலைக்கு எண்ணை கூடத் தேய்க்காமல் உண்ணாமல் நோன்பு இருப்பார்கள். அதன் நீட்சியாகவே "சாம்பல் புதன்" தினத்தில் நெற்றியில் சாம்பலினால் சிலுவை அடையாளம் வரையப்படுகிறது.

நெற்றி என்பது மனிதனுடைய முழுமையைக் குறிப்பதாக விவிலியம் கோடிட்டுக் காட்டுகிறது. நெற்றியில் பூசப்படும் சாம்பல் மனிதனை முழுமையாக இறையில் சரணடைய வைக்கிறது.

நிலத்தின் புற்பூண்டுகளுக்கோ மரங்களுக்கோ தீங்கு இழைக்காமல், தங்கள் நெற்றியில் கடவுளின் முத்திரை இல்லாதவர்களுக்கு மட்டும் தீங்கு செய்யுமாறு அவற்றுக்குக் கட்டளையிடப்பட்டது எனும் திருவெளிப்பாடு வசனம் நெற்றி குறித்த விவிலியப் பார்வையை விளக்குகிறது. இயேசு நாற்பது நாட்கள் இரவும் பகலும் உண்ணாமல் வனாந்தரத்தில் நோன்பு இருந்த நிகழ்ச்சி விவிலியத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் அந்த அனுபவத்தில் இணைகின்றனர்.

தவக்காலம் நமது இயலாமைகளை, பாவங்களை, பிழைகளைக் கண்டறியும் காலம். நமது பலவீனங்களை இறைவனின் பலத்தின் மூலம் நிவர்த்தி செய்யும் காலம்.

இந்தக் காலத்தில் ஆடம்பர அணிகலன்கள், உணவு, கேளிக்கை, பொழுதுபோக்கு இவற்றை வெறுத்து அதன் மூலம் மிச்சப்படுத்தப்படும் பணத்தை ஏழைகளுக்கு வழங்குவதை பலரும் கடைப்பிடிக்கின்றனர்.

சிலர் வெள்ளிக்கிழமை தோறும் அன்னதானம் இடும் வழக்கத்தைக் கொண்டிருக்கின்றனர்.

நோன்பு இருப்பது பிறருக்குத் தெரியாமல் இருப்பதே நல்லது என்கிறார் இயேசு. நோன்பு இருப்பதை பெருமைக்காகவும், புகழுக்காகவும், சடங்கிற்காகவும் செய்யாமல் சுய விருப்பத்தோடும் இறைவனில் சரணாகதி அடையும் மனநிலையுடனும் செய்ய வேண்டுமென்பதே இறைவனின் விருப்பமும் போதனையும்.

இறைவனின் அருளைப் பெற விழைபவர்கள் தங்களைத் தாழ்மை நிலைக்குத் தள்ளி இறைவனை முழு மனதுடன் ஏற்றுக் கொள்ளுதல் அவசியம். அதையே சாம்பல் புதன் நினைவூட்டுகிறது. ○

### திருஅவைச் செய்தி

குடும்ப உணர்வு நம்மிடையே குறைவதே உலகில் நிலவும் பசிக்கு முதல் காரணம் என்கிறார் வத்திக்கானின் நீதி மற்றும் அமைதி அவையின் தலைவர் கர்தினால் பீட்டர் டர்க்சன்.

மதங்களிடையே உரையாடலைப் பலப்படுத்துவதில் திருத்தந்தை பிரான்சிஸ் ஆர்வம் கொண்டுள்ளதாகவும், அவரின் எளிமையான அணுகுமுறை, இது குறித்த நம்பிக்கைகளை அதிகரித்துள்ளதாகவும் அறிவித்தார் பல்சமய உரையாடல் பணியில் ஈடுபட்டுள்ள வத்திக்கான் அவையின் தலைவர் கர்தினால் ஜீன் லூயிஸ் டாரன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





## மெதடிஸ்த திருச்சபை

யோன் வெஸ்லி என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட இத்திருச்சபையானது, 1817 இலும், 1856இலும் இரு தடவை இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டது. 1814ல் தோமஸ்கூக் என்பவர் ஆறு மறைபரப்பாளர்களுடன் இந்தியா நோக்கிப் புறப்பட்டார். வழியில் அவர் இறந்து போகவே, ஜேம்ஸ் லிஞ்ச் என்பவரின் தலைமையில் 1817ல் மதராஸ் வந்தடைந்தனர். இவர் தனது முதலாவது மெதடிஸ்த வார்த்தைப்பாட்டை 02.03.1817ல் ஒரு மாட்டுத்தொழுவத்திலே ஆற்றினார். முதல் மெதடிஸ்த ஆலயமானது றொயபெற்றா என்னுமிடத்திலே 1819ல் கட்டப்பட்டது. இந்நாட்களில் மெதடிஸ்த சபையிலே ஏறக்குறைய 100 உறுப்பினர்கள் இருந்தனர். இவர்கள் அனைவரும் ஐரோப்பியர்கள் அல்லது பறங்கியராவர்.

மீண்டும் 1857ல் மெதடிஸ்த எப்பிஸ்கோப்பேலியன் சபையைச் சார்ந்த மறைபரப்பாளர் வில்லியம் ஹிட்லர் எனும் அமெரிக்க நாட்டவரால் மெதடிஸ்த சபை இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டது. இவரைத் தொடர்ந்து 1870ல் வில்லியம் ரெய்லர் என்பவரும் வேறு சில மெதடிஸ்த பெண் மறைபரப்பாளர்களும் இங்கு வந்து மறை பணியாற்றினர். 1981 வரை இச்சபையானது, "மெதடிஸ்த் எப்பிஸ்குளோபஸ்" திருச்சபை என அழைக்கப்பட்டது. பின்னர் இந்திய மெதடிஸ்த திருச்சபையாக மாறியது. 1947ல் இது பிறெஸ்பிற்றேரியன், அங்கிலிக்கன் மற்றும் ஏனைய புரட்டஸ்தாந்து சபையினருடன் இணைந்து தென் இந்தியத் திருச்சபையாக உருப்பெற்றது.

## பப்ரிஸ்ற் திருச்சபை

இத்திருச்சபையானது 1609ல் ஒல்லாந்து நாட்டில் ஆம்ஸ்ரர்டாமில் ஆரம்பித்தது. இவர்கள் குழந்தைகளுக்குத் திருமுழுக்குக் கொடுக்கக்கூடாதென்றும், வளர்ந்தோருக்கே அதுவும் நீரில் மூழ்கி அமிழ்த்தியே திருமுழுக்குக் கொடுக்கப்படவேண்டும் எனும் கொள்கையுடையோராய் இருந்தனர். மேலும் விசுவாசத்தின் வழியாகவே மீட்பு என்றும், திருவிவிலியமே விசுவாச வாழ்விற்கான ஒரே அதிகாரமென்றும், திருச்சபையின் தனிச் சுதந்திரத்தையும் அறிக்கையிட்டனர். இத்துடன் விசுவாசப் பிரமாணங்கள் எதனையும் இவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இத்திருச்சபையானது, 1793ல் இந்தியாவின் கல்கத்தாவிற்கு வருகை தந்த வில்லியம் ஹரி எனும் பிரித்தானிய நாட்டவரால் வங்காள நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. இவர் செரம்பூர் கல்லூரியை ஆரம்பித்து, இந்தியமொழி இலக்கிய வளர்ச்சிக்குப் பங்காற்றினார். இவரைத் தொடர்ந்து அமெரிக்க நாட்டு பப்ரிஸ்ற் திருச்சபையினர் இந்தியாவின் பல பகுதிகளிலும் விசேடமாய் தென் பகுதிகளிலும் தம் பணியை ஆரம்பித்தனர். 1834ல் மதுரையிலும் 1835ல் தெலுங்கு நாட்டிலும், 1836ல் அசாம் பகுதியிலும் தம் பணியைத் தொடர்ந்தனர். மேலும் தமிழ் நாட்டில் ஆர்க்காடு பிரதேசத்திலும் வேலூரைத் தலைமைப் பீடமாய்க் கொண்டு செயலாற்றினர். 19ம் நூற்றாண்டின் முற்பகுதியில் வடகிழக்குப் பகுதிகளில் தம் மறை பரப்பு அலுவல்களை விஸ்தரித்தனர். இதன் மூலம் இன்று இந்தியாவில் 2.5 மில்லியன் பப்ரிஸ்ற் சபையினர் உள்ளனர்.




-நில்மினி கஜேந்திரன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உறுதிகொண்டு முயன்றுவிடு...!



● வயலூர் சந்திரசேகரம்

உறங்கிக் கொண்டிருந்த,
உணர்ச்சிகளை!
உசுப்பி எழுப்பினான் - அவன்
கசங்கிய உணர்வுகளை
விசும்பலுடன்
விறைத்துப் பார்த்தான்,
"பொசுங்கிப் போவதற்குள்!
பொன்னாடையாக்கி
சாதனைச் சாகரம்
ஆக்குகின்றேன் பார்!......"
வேதனை வேக்காடுகள்
வேண்டாம்!
"வெற்றியைக் கைதியாக்கி
வேள்வி வதம் புரிகின்றேன்?
உறுதி அவன் உடலெல்லாம்
ஊற்றெடுத்துப் பாய,
உற்சாகச் சங்கை .....
உக்கிரமாய் ஊதுகிறான்.....
விதிவலையால் எனக்கு! - நான்
சதிச் சாம்ராஜ்யமல்லவா
அமைத்து விட்டேன்! - அவன்
உற்சாக வெள்ளத்தில்
உயர, உயரப் பறந்தான்,
இறந்த காலத்தின்
இருட்டுகளையெல்லாம்
கிழித்தெறிந்தான்,
ஏமாற்ற எச்சில்களை
ஏளனமாகப் பார்த்தான்.
எதிரியையும் எரிக்கும்
நம்பிக்கைத் தீ - அவனுள்
எரிய ஆரம்பித்தது.

**அறவாழ்வு வாழத்தான் ஆசையானால்**

**அவதிப்பட யாருக்கு ஆசைவரும்...?**

**திறமுனது பேச்சென்னைச் சிந்திக்க வைக்கிறது**

**அவதியில் பிறப்பதன்றோ ஆனந்தம்!**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# தீர்க்க தரிசனங்களின் நிலம்

பயணக் கட்டுரை 02

அ.ச.பாய்வா

1948.05.14ல் இஸ்ரேல் சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டதன் அடுத்த நாள் அது, பலஸ்தீனப் போராளிக் குழு, எகிப்து, சிரியா, யோர்தான், லெபனான் ஆகியவற்றுடன் போராடவேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டாலும், அது தனித்து நின்று போராடி ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டது. எப்படி.....? யோர்தான் படை முன்னேறிய மேற்குக் கரை யோர்தானுக்கும், எகிப்து முன்னேறிய காஸா பகுதி எகிப்துக்கும் என்றானது. ஆனால், அதன்பின்னர் 1973வரை நடைபெற்ற ஐந்து யுத்தங்களிலும் யோர்தான், சிரியா, எகிப்து ஆகியன தோற்றுப் போனது மட்டுமன்றி அவர்கள் தம்வசப்படுத்தியிருந்த காஸா நிலப்பரப்பு, மேற்குக்கரை என்பவற்றோடு யோர்தான் மேலதிகமாய்ப் பிடித்து வைத்திருந்த கிழக்கு யெருசலேமையும் இழக்க நேரிட்டது. அதற்கிடைப்பட்ட அந்த இருபத்தைந்து வருடகாலப் பகுதியில் எகிப்தோ யோர்தானோ தாங்கள் பிடித்து வைத்திருந்த பகுதிகளை பலஸ்தீனர்களுக்குக் கொடுக்கவுமில்லை. கொடுக்க விரும்பவுமில்லை. இது எத்தனை பெரிய அரசியல் மோசடியென்பதைப் பாவப்பட்ட பலஸ்தீனியர்கள் இன்னமும் உணரவில்லையென்பதுதான் வேதனைக்குரியது.

இலங்கையில் தம் கண்ணெதிரே தமிழ்ச் சகோதரர்கள் பட்ட வரலாற்றுத் துன்பத்துக்குக் குரல் கொடுக்காத நம் இசுலாமிய சகோதரர்கள், கண்ணுக்குப் புலப்படாத பலஸ்தீனியர்களுக்காகக் குரல் கொடுப்பதை அரசியல் கோமாளித்தனம் என்றுதான் சொல்லத் தோணுகிறது. இதன் பின்னணியிலுள்ள அந்நிய அரசியலின் ஆதிக்கத்தை நம்மவர்கள் புரிந்துகொள்ளவில்லை. கூட்டிக் கழித்துப் பார்த்தால் இங்கும் எஞ்சியிருப்பது மத உணர்வு மட்டுந்தான்; இவர்கள் வெறும் அம்புகள் தான்.

இந்த முடிவற்ற வரலாறு ஒருபுறமிருக்க பயணத்துள் கொஞ்சம் நுழைவோம். இஸ்ரேலுக்கு விசா பெறுவதெல்லாம் பெருஞ் சிரமம். அத்தனை கெடுபிடி. ஆயிரக்கணக்கான வருடங்களாகப் போராடிப் பெற்ற பூமியல்லவா! எனவே, எனக்குக் கிடைத்த உல்லாசப் பயண விசாவின்படி நான் யோர்தானூடாகத் தரைவழி செல்லவேண்டும். அதுவும் ஒரு வசதிதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏனெனில் ஒரே விசாவில் யோர்தானையும் கொஞ்சம் பார்க்க முடியுமல்லவா...?

'அம்மான்' விமான நிலையத்தில் தரையிறங்கி, யோர்தானூடாக இரண்டு மணிநேரப் பயணஞ் செய்துதான் இஸ்ரேலின் கிழக்கு வாயில்களில் ஒன்றான *HUSEIN BRIDGE* ஐத் தாண்ட வேண்டும். இவ்வாறு யோர்தான் வழியாக இஸ்ரேலுக்குள் நுழைய மேலுமிரண்டு வாயில்கள் உள்ளன. ஒன்று *ALAN BY.* (பிரித்தானியருடனான போரில் சாகசங்கள் செய்து மரணமெய்தியவர்). அடுத்தது, தென்கிழக்கு வாசலான *ARAVA BOADER.* இதன் வழியாகப் பத்துக் கட்டளைகள் வழங்கப் பட்ட சீனாய் மலைக்கு இலகுவாகச் செல்லலாம். ஆனால், இப்பகுதியூடாகப் பயணஞ் செய்ய அனுமதி கிடைப்பது அபூர்வம்.

இந்த யோர்தான், கி.மு. 4ம் நூற்றாண்டுகளில் கிரேக்கர்களால் 'பிலடெல்பியா' எனப் பெயரிட்டு அழைக்கப்பட்டது. 1946ல் தான் இது புதிய யோர்தான் எனப் பெயர் கொண்டது. ஒன்பது மலைகளின் மேல் கட்டப்பட்ட நகரம் என்கிற சிறப்பும் இதற்குண்டு.

இஸ்ரேலின் கிழக்குத் தெற்காகப் பரந்து கிடக்கும் ஒரு பெரு நிலப் பரப்பு. இவ்வாறு யோர்தான் பள்ளத் தாக்கை அண்மித்த போதுதான் நான் அதனைப் பார்த்தேன். சுமார் 400 - 500 மீற்றர் பள்ளத்தில் யோர்தான் நதி ஓடிக்கொண்டிருந்தது. சிறு வயதில் என் வேதாகம வாசிப்பின் போது மனதில் பதிந்துகிடந்த நதி வேறு, நான் கண்ட நதி வேறு. எங்கள் கொட்டியாரக் குடாவில் சங்கமிக்கும் மகாவலி கங்கையின் பிரவாகம் போலிருக்கும் என எண்ணியிருந்த எனக்கு அது ஏமாற்றமே!

செதுக்கி வைத்தாற்போல ஒவ்வொரு மலைக் குன்றும். மலை நெடுக இயற்கையாயமைந்த குகைகளென்று ஒவ்வொரு கோணத்திலும் புதிய புதிய பரிமாணங்களைத் தொட்டு நின்ற அவை என் கண்களுக்குக் கிடைத்த பெருவிருந்து. எனது நிழற் படக்கருவி தன்னிச்சையாய் இயங்கிக் கொண்டேயிருந்தது. எதை எடுப்பது, எதை விடுவது என்ற இனம் புரியாத குழப்பம்.

இத்தனை கரடு முரடான பூமியைத் தரிசிப்பேன் என்று நான் முதலில் எண்ணவில்லை. மலையும், மணற் திட்டுகளும், வெம்பையும் வெறுமையும் சர்வத்திலும் ஆட்சி செலுத்திய வண்ணமிருந்தது. வேதாகமத்தில் வரும் செம்மறி ஆட்டையோ அன்றி மேய்ப்பர்களையோ காணப் பேராவலாய் இருந்தது. வழிகாட்டியிடம் கேட்டபோது, மலைகளை உன்னிப்பாகக் கவனித்து வாருங்கள், தென்படும் என்றான். அவ்வாறு கண்டேன் வெகுதூரத்தில் சிறு சிறு புள்ளிகளாய் செம்மறியாடுகளையும், இடையர்களையும். பெரிதாக மரங்களென்று - ஏதும் தென்படவில்லை அங்கு. ஆனால், ஆடுகளுக்கு மட்டும் புலப்படும் புல் பூண்டுகள்தானெங்கும்.

இந்த அரேபியர்களும், யூதர்களும் ஏனித்தனை கரடு முரடானவர்களாயும், ஈவிரக்கம் அற்றவர்களாயும் இருக்கிறார்களென்கிற ரகசியம் அந்த மண்ணைப் பார்த்த பின்னர்தான் புரிய வந்தது. ஒவ்வொரு மனிதனும் தான் வாழும் மண் சார்ந்த உணர்வுகளுடன் வாழவேண்டிய நிர்ப்பந்தம் அவனை அவ்வாறாக்கியிருக்கிறது. அங்கு வாழ்வுக்கு ஒவ்வொருவனும் போராடிக் கொண்டிருந்தான்.

- தொடரும்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொண்டனின் சில நிமிடங்கள்....

- ஜெயரூபி -

தொண்டனின் சில நிமிடங்களுக்காக திரு. ஆறுமுகம் அலோசியஸ் சிங்கராயர் ஞானசூரியம் அவர்களை சந்திக்கின்றோம். இவர் சுமார் 22 வருடங்கள் 7 மாதங்களாக, மட்டக்களப்பு மரியாள் பேராலயத்தில் 'திருப்பண்ட அறை' காப்பாளராக (சக்கிறிஸ்டியன்) பணிபுரிந்து இளைப்பாறியவர். பல்வேறு குருக்களோடும், ஆயர்களோடும் பணிபுரிந்த, தமது அர்ப்பணிப்பான பணியினால் பலரையும் கவர்ந்த இவரைத் தொண்டன் சந்தித்தது.

**உங்கள் இளமைப் பருவம் பற்றி தொண்டன் வாசகர்கட்கு கூறமுடியுமா....?**

● *1940ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20ம் திகதி தாண்டவன்வெளி, சிறில் ஒழுங்கையில் பிறந்தேன். எனக்கு ஓர் ஆண் சகோதரரும், இரண்டு பெண் சகோதரிகளும் இருந்தனர். எனது ஆரம்பக் கல்வியை தாண்டவன்வெளி கிளனி ஆண்கள் பாடசாலையில் (தற்போது ஜோசவ்வாஸ் வித்தியாலயம்) பெற்றுக் கொண்டேன். பின்னர் கவர்மென்ட் கொலிஜ் எனக் கூறப்படும் அரசினர் கல்லூரியில் எஸ்.எஸ்.சி வரையும் படித்தேன். இதற்கிடையில் எனது தகப்பனார் திருவாளர் ஆறுமுகம் அலோசியஸ் அவர்கள் 1954ல் காலமாகி விட்டார். எனவே, குடும்பச் சூழ்நிலை காரணமாக, 1956ம் ஆண்டுடன் என்னுடைய கல்வி வாழ்க்கையை முடித்துக்கொள்ள வேண்டியதாயிற்று.*

**அரசினர் கல்லூரியானது அக்காலத்தில் எங்கு அமைந்திருந்தது?**

● *இப்போது பிராந்திய சுகாதாரப் பணிமனை அமைந்துள்ள இடத்தில் அமைந்திருந்தது. பக்கத்தில் விளையாட்டு மைதானம் பள்ளியைச் சுற்றிவர ஏராளமான மாமரங்கள். மிகவும் ரம்மியமான சூழல்.*



**கல்வி வாழ்க்கையின் பின்னர் என்ன செய்தீர்கள்....?**

● *எனது தகப்பனார் மஞ்சந்தொடுவாயில் அமைந்திருந்த தச்சுவேலை நிறுவனத்தில் கதிரைபின்னல் வேலைகளைச் செய்துவந்தார். இது தொழில் திணைக்களத்தின் கீழ் இயங்கி வந்தது. அவரின் மரணத்தின் பின் அவ்வரசினர் வேலை எனக்கு வழங்கப்பட்டது. அப்போது, ஆரம்பச் சம்பளம் 700/=. பின்னர் மொறட்டுவையில் உள்ள 'முறட்டுமுல்ல' என்னும் இடத்தில் பின்னல் வேலை தொடர்பாக விசேட பயிற்சி பெற்றபின் ரூபா. 800/= சம்பளம் தந்தார்கள். பின்னர் எங்கள் நிறுவனத்தையும், எங்களையும் ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம் பொறுப்பேற்றது. அத்துடன், எங்களனைவரையும் அம்பாறையில் உள்ள தொழிற்சாலைக்கு இடம்மாற்றினார்கள். இந்நிலையில் இனமுறுகல் தன்மை காரணமாக 1978ல் பதவியை விட்டு விலகினேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**'முரட்டுமுல்ல' வில் என்ன வகையான பயிற்சியைப் பெற்றீர்கள்?**

● கதிரை விளிம்புகளில் துளையிட்டுத்தான் பின்னல் வேலைகளைச் செய்வது வழக்கம். ஆனால், அப்படித் துளையிடாமல் பிரம்புகளை (பிளந்து) சுற்றிக் கட்டி பின்னர் பின்னுவது தொடர்பான பயிற்சிதான் அது. அப்படிப் பின்னினால் பின்னல் உறுதியாக இருக்கும்.

ஆலயம் செல்வது மிகவும் முக்கியமானது. ஆன்மீகம் முக்கியம். சிறியோர், பெரியோர் அனைவரும் பக்திச் சபைகளில் இணைந்து பணிசெய்ய முன்வரவேண்டும்.

**தொடர்ந்து வாழ்க்கையை எப்படி ஓட்டினீர்கள்...?**

● செங்கலடியில் அமைந்திருந்த 'பாலாஸ் குரூப்' என்னும் மரத் தளபாட நிறுவனத்தில் வேலை புரிந்தேன். இக்காலகட்டத்தில் தேவாலயங்களின் செயற்பாடுகளில் ஈடுபாடு காட்டத் தொடங்கினேன். தாண்டவன்வெளி ஆலயத்தின் பங்குச் சபை செயலாளராகப் பணிபுரிந்தேன். அத்துடன் மரியாயின் சேனையிலும் அங்கத்துவனாக இருந்தேன். மட்டக்களப்பு 'கியூரியா' சபையின் செயலாளராகவும் பணியாற்றினேன். கொழும்பு 'செனத்தோஸ்' மாநாடுகளிலும் கலந்து கொண்டுள்ளேன்.

**உங்கள் திருமணம் பற்றி....?**

● 1977ல் வீச்சுக்கல்முனையில் திருமணம் செய்துகொண்டேன். தற்போது எனக்கு இரண்டு ஆண்களும், இரண்டு பெண்களுமாக நான்கு பிள்ளைகள் உள்ளார்கள். இத் திருமணத்தின் பயனாக் வீச்சுக்கல்முனை அன்னம்மாள் பங்கிலும் ஈடுபாடு காட்ட வாய்ப்புண்டானது. வீச்சுக்கல்முனை திருப்பண்ட அறைப் பொறுப்பாளராகப் பணிபுரிந்தேன். இதுதவிர, மரியாயின்சேனைத் தலைவர், பங்குச் சபைச் செயலாளர், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், 'யுனிசெப்' நிறுவனத்தின் உள்ளூர் அமைப்புத் தலைவர் போன்ற பதவிகளை இறைவன் எனக்கு அருளினார். வீட்டுத் திட்டங்கள், மலசலகூடத் திட்டங்கள், வீதியமைப்புகள் போன்ற உள்ளகக் கட்டமைப்பு வசதிகள் என்னால் ஊர் மக்களுக்குச் செய்யமுடிந்தது.

**பின்னர் எவ்வாறு மரியாள் இணைப்பேராலய (தற்போது பேராலய) திருப்பண்டக் காப்பாளராக இணைந்து கொண்டீர்கள்....?**

● சில காலமாக மரியாள் பேராலயக் குருக்களாகப் பணியாற்றிய வர்களே வீச்சுக்கல்முனை ஆலயத்தையும் பராமரிக்க வேண்டியிருந்தது. அவர்களுடன் ஏற்பட்ட பரிச்சயம் காரணமாக அவர்கள் என்னில் நம்பிக்கை கொண்டு அப் பொறுப்பைத் தந்தார்கள். 1991.06.09 தொடக்கம் 2014.01.12 வரை பணியாற்றினேன்.

**உங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவங்கள் ஏதும் ........**

● என்ன! பள்ளிக்கூடத்தில் குறும்பு செய்பவர்களுடன் சேர்ந்து வாங்கிய அடிகள்தான்....! (மனம் விட்டுச் சிரிக்கின்றார்)

**நீங்கள் வாசகர்கட்கு சொல்ல விரும்புவது என்ன...?**

● பாடசாலைக் காலம் பொன்னானது. மாணவர்கள் அதை நன்றாகப் பயன்படுத்த வேண்டும். ஆலயம் செல்வது மிகவும் முக்கியமானது. ஆன்மீகம் முக்கியம். சிறியோர், பெரியோர் அனைவரும் பக்திச் சபைகளில் இணைந்து பணிசெய்ய முன்வரவேண்டும்.

**தொண்டன் சார்பில் நன்றிகூறி விடை பெற்றோம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கண்கள் திறக்க ஒரு நாள் வரும்.....!

ஆனந்தா ஏ. ஜீ. இராஜேந்திரம்





நம்மில் பலருக்கு நம்மோடு வாழுகின்றவர்கள் நம்மோடு இருக்கின்றவரை அவர்களது பெருமை தெரிவதில்லை. மரமொன்று நிழல் தரும். அந்த அருமை வெயிலில் தகிக்கின்ற போதுதான் தெரிய வருகின்றது. தண்ணீரின் மகிமை தாகமெடுக்கின்றபோது, குடிக்கத் தண்ணீர் இல்லாத நேரத்தில் தான் மனத்திற்குப்படுகின்றது. மனித மனங்கள் பல சந்தர்ப்பங்களில் பலதையும் தமக்குரியதொன்றாகவும், தமக்கு அவை கிடைக்க வேண்டியது எழுதப்பட்ட நியதி என்பது போலவும் நடந்து கொள்வது வழமை! சிலருக்குத் தாம் எண்ணியது போல சில பல நடக்கின்றபோது ஏதோ தாம் போகின்ற பாதை சரியானது என்பதுபோலவும் தம் சொற்படிதான் எல்லாம் நடக்க வேண்டும் என்பது போலவும் நடக்கத் தலைப்படுவதுண்டு. என்னதான் இந்தப் போக்கின் விபரீதத்தை எடுத்துச் சொன்னாலும் தலையில் ஏறுவதேயில்லை! வேகமாகப் போகின்ற வாகனத்திற்குத் தடைபோடப்பட்டால் நடப்பது விபரீதமாக இருக்கும் இல்லையா....?

இயேசுவுடன் இருக்கின்ற வரையிலும், அவருக்கு எவ்வளவுதான் மிக மிக அருகாமையில் நின்று, உண்டு குடித்து உறங்கி வாழ்ந்து, அவரது வல்லமைகளைக் கண்கூடாகக் கண்டு, சாட்சியங்களாக இருந்தாலுமென்ன அவரது அருமை அவர்களுக்கு அநேக வேளைகளில் தெரிந்திருக்கவில்லை. சோடா போத்தலை உடைத்தவுடன் அடங்கியிருக்கும் வாயு வீரியத்துடன் பாய்ந்து வெளியேறுவதுபோல அவர்களும் அவரது புதுமை நிறைந்த வல்லமையை, ஆற்றலைக் கண்ட மாத்திரத்தில் 'இதோ நமக்கொரு தலைவன் .... யாரும் எங்களை அசைத்துவிட முடியாது' என்பது போல் உசாரடைந்து 'நீங்கள் தான் மெசியா' என்றெல்லாம் அறிக்கையிடுவார்கள். பிறகு அவர் நடத்தை தம் எதிர்பார்ப்புக்கு அளவாக இல்லாமலிருக்கின்றபோது ஏமாற்றமடைந்து, மனச்சோர்வு கண்டு துவண்டுவிடுவார்கள்.

அவர்களில் பலர் அவரை இறைவன் மெசியா என்பதிலும் பார்க்க, ஆன்ம மீட்பர் என்பதிலும் பார்க்க, நாட்டை மீட்க வந்த போராளியாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தான் பார்த்தார்கள் என்பதே உண்மை. அவரும் அவர்கள் மனநிலைகளையெண்ணி அதிகம் கவலைப்பட்டவராக இருக்கவில்லை. வேளை வரும்போது பார்த்துக்கொள்ளலாம் என்று விட்டு விட்டவர்போல, வருகின்ற நாட்களுக்கும், சம்ப வங்களுக்குமளவாக அவர்களை உருவாக்கி விடுவ திலேயே முனைப்பாக இருக்கின்றார். அவர் போன பாதையில் புதுமைகளும் சேர்ந்து நடந்தன. மக்க ளும் கட்டுண்டவர்களாகப் பின் தொடர்ந்தனர். அவர் தம் போதனைகள், பல சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு ஆறுதலாக இருந்தன. பல வேளைக ளில் எச்சரிக்கையாக இருந்தன. சமயங்களில் வழி காட்டுபவையாகவும் இருந்தன.

அவரைத் தலைமேல் தூக்கிக் கொண்டாட வேண்டியவர்களே, அவர் தலையை நொருக்கித் துளையிட்டார்கள். அவரது கைகளைத் தொட்டு முத்தமிட வேண்டியவர்கள் அவற்றை ஆணி கொண்டு துளையிட்டார்கள். அவர் காலில் விழுந்து தொழ வேண்டியவர்கள் சந்தர்ப்பம் பார்த்து வாரி விட்டு அவரைக் குப்புறக் கவிழ வைத்தார்கள். அவரை அறியாதவர்கள், விளங்கிக் கொள்ளாதவர் கள்தான் இதைச் செய்கின்றார்கள் என்றால் அதைப் பொறுத்துக் கொள்ளலாம், கவனிக்காமல் விட்டு விடலாம். ஆனால், கூட இருந்து குழி பறிப்பவர் களை, தெரிந்தும் தெரியாமல் நடக்கின்றவர்களை, எச்சரிக்கப்பட்டும் தவறிழைத்தவர்களை எந்த ரகத்தில் சேர்ப்பது....?

மரித்தவர் உயிர்த்தபோது கூட அவர்களால் அடையாளம் காணமுடியவில்லை என்கின்ற அளவுக்கு அவரிடமிருந்து அந்நியப்பட்டு இருந்தார் கள். அவரை விளங்கிக்கொள்ளாதவராய் இருந் தார்களா...? விளங்கிக்கொள்ள வேண்டிய அவசியம் அவர்களுக்கு இருந்திருக்கவில்லையா...? குழம்பிய மனம் கண்களை மறைத்துப் போட்டு விட்டது. இதனால்தான் குழம்பிய நிலையில் முடிவுகளை எடுக்கவேண்டாம் என்று சொல்கிறார்கள் போலி ருக்கின்றது. எம்மாவுஸ் பயணத்திலே எவ்வளவு தான் அவர்களுக்குப் பழையவற்றை நினைவூட்டித் தன்னை வெளிக்காட்ட அவர் முனைந்தாலும் கல்லுளி மங்கர்களாக அவர்கள்.....! கடைசியாக உரிய வேளையில் தம்மை அவர்கள் உணரப் பண்ணுகிறார். அவர்கள் கண்களைத் திறக்கப் பண்ணுகிறார். தற்போது, அவர்கள் பாலைவனத் திலிருந்து மீண்ட மனநிலையில், கும்மிருட்டில் கோடி விளக்கைக் கண்டவர்கள் மாதிரி, காணாமற் போன விசுவாசத்தை தேடாமலே கண்டுகொள்கின்றார்கள்.

அவரோடு கூட வாழ்ந்தபோது அவர்கள் பெற்றிருந்த விசுவாசம் ஆட்டம் கண்டது உண்மை. அவர் தூங்கிச் செத்த சிலுவையின் பக்கமே தலை வைத்துப் படுக்கவில்லை அவர்கள். ஆனால், இன்று அவர் கண்டுகொள்ளப்பண்ணிய விசுவாசம் மாறானது. அவர் இல்லாத வாழ்வை அனுபவித்த தன் பலனாய் தனிமையின் காய்ச்சல் கண்டு வேதனைப்பட்டு நின்றவர்கள் அவருடைய அருமை யைப், பெருமையை, அவரது உண்மைத் தன்மையை உணர்ந்து கொண்டபோது பெற்ற விசுவாசம் மேன்மையானதாக இருக்கின்றது. சீமோன் பேதுருவும், யோவானும் ஆலயத்தில் நீண்ட நாள் நோய் கண்டு முடங்கிக் கிடந்தவனை இந்தப் புதிய விசுவாசத்தின் வெளிச்சத்திலே, இயேசுவின் வழி யிலே சென்றுகுணப்படுத்துகின்ற அளவுக்கு விசுவா சமும் மனத்திடனும், ஆழமும், உறுதியும், தன்னம் பிக்கையும் கொண்டவர்களாக மாறியமைந்து விடுகிறார்கள்.

இதனால்தான் திருப்பாடல்கள் வல்லமை யுள்ள தேவனை, அவரது மகிமையை உணர்ந்து கொண்டு அவரை ஏத்திப் போற்றுமாறு எம்மை அழைக்கின்றது. அவருக்குப் பாடல்கள் பாடி அவரது ஆற்றல்களைத் தேடி அடையுமாறு எமக்கு அறைகூவல் விடுக்கின்றது.

எதையும், எவரையும் மலிவாக எடுத்துக் கொள்ளாத வாழ்க்கை நமக்கு வேண்டும். நம்மோடு இருக்கின்றார்களேயென ஒருத்தரையும் ஏளன மாக எண்ணிவிடாத மனப்பான்மை எம் மனதில் உருவாக வேண்டும். தூய வின்சன்ட் டி போல் சபையை உருவாக்கிய முத்திப்பேறுபெற்ற பிரெட்ரிக் ஓசான்னம் சொல்வதுபோல, "ஒரு துடைப்பந்தா னும் மனித முகத்தைக் கொண்டிருந்தால் அதற்கு மனித மாண்பைக் காட்டவேண்டியது எம் கடனாக இருக்கட்டும். நமது அலட்சியங்களும், அறியாமையும், அக்கறையின் மையும் நம் அருகிருக்கக்கூடிய யேசுக்களை காட்டிக் கொடுத்து சிலுவையில் அறைந்து கொன்றுவிட்ட பின் மாரடிப்பதில் பலனில்லை என்பதனை உணர்ந்து நாம் வாழ முற்படுவோம். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



சிறுகதை

# சூனியப் புள்ளிகள்....

மாதா கோயில் மணியோசை ஒலித்தது. தூரத்தில் நாயொன்று ஊளையிட்டது. கிழக்கிலிருந்து சில்லித்தாராக்கள் பறப்பதுபோன்ற ஒலிகள் கேட்கின்றன. அதிகாலைக் குளிர் உடலை சில்லிட்டு உறைய வைக்க, அம்மா விளாவிக் கொடுத்த இளஞ்சூடான நீரால் முகத்தைக் கழுவித் துடைத்தாள். விறாந்தையில் பிளாஸ்ரிக் வாளி தயாராக இருந்தது. அதிகாலையே அவித்த இருநூறுக்கும் மேற்பட்ட மென்மையான இடியப்பங்களும், இடி சம்பலும் உள்ளே இருந்தன. இது புதியதல்ல. அக்கா வயசுக்கு வந்துவிட்டதும் அம்மாவைப் பயம் அப்பிக்கொண்டது. மூத்தவளை இனிச் சாமத்தில் அனுப்பக்கூடாது. என்னைப் பழக்கப்படுத்திக் கொண்டேன். நானும் வயசுக்கு வந்துவிட்டால் அம்மா என்ன செய்வாள்....? ஒருவேளை, இடியப்பம் செய்வதை விட்டுப்போடுவாளோ? அப்படி விட்டுவிட்டால் மூன்றுபேரும் சாப்பாடு இல்லாமல் பட்டினி கிடந்து சாகவேண்டி வருமோ....! என் பள்ளிப்படிப்பு, எதிர்காலக் கனவுகள் எல்லாமே அக்காவைப்போல கருகிப்போக.....

"என்ன பிள்ள இன்னம் வெளிக்கிடல்லயா....?"

குளிரையும் தாண்டி குத்திட்டு நின்ற சிந்தனை அம்மாவின் குரலால் சிதறிப்போக இடியப்பக் கூடையுடன் நடந்தாள்.

முழங்காலளவு சில்லிட்டு ஓடிய குளிர் நீரில் கால்கள் நனைய மெது மெதுவாக நடந்து கரையேறி மெல்லிய நீள கம்பொன்றினால் முன்னே தட்டித் தட்டி நடந்தாள். பாம்பு, பூச்சி, பூரான் சிறு செடிகளினுள் கிடந்தால் விலகி ஓடிப் போகட்டும் என்ற பாதுகாப்புணர்வில் அவளாகச் செய்து கொள்ளும் செயல். அதிகாலை முகம் கழுவாத சூரியன் பெற்சீற்றை உதறிவிட்டு மெல்ல எட்டிப் பார்த்தான். புராணம் படிக்கும் பாஸ்கரன் வேலிக்கு

- பைந்தமிழ்க்குமரன் டேவிட் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மேலால கொக்கைத் தடி நீட்டிப் பூப்பறிக்கும் திருடர்களைப் பிடிக்க எட்டி எட்டிப் பார்த்தார். நாவலர் பாடசாலை அதிபர் மனைவியின் தூக்கத்தைக் கலைக்காமல் முன்னமே எழுந்து, வாசல்கூட்டி, தண்ணீர் எடுத்துக் கொண்டிருந்தார்.

'இண்டைக்கெண்டாலும் நேரத்துக்கு ஸ்கூலுக்குப் போகவேணும்'



அவள் மனதில் பயமொன்று தோன்றி படபடப்பாக மாறியது. இடியப்பக் கூடை காலியாவதற்கு சுணங்கிப் போனால் ஸ்கூல் தொடங்கிரும். வாசல்ல வோச்சர் ஐயா தடுத்து நிப்பாட்டிப்போடுவார். தேவாரம் பாடி, தூரநோக்கு பணிக்கூற்று சொல்லி, அந்த நாளுக்கான பிறந்த நாள் பிள்ளயள் முன்னால வர அவர்களுக்கு ஹேப்பி வேத்டே பாடி, அதுக்குப் பிறகால நற்சிந்தனை சொல்லி முடிய மணியடிக்கும். பின்னால ஒலி பெருக்கியில இசை ஒலிக்கும். படபட வெண்டு விலகி நிண்டு கொண்டு உடற் பயிற்சி செய்யவேணும். அத்தனையும் முடிஞ்சி வரிசை வரிசையா பிள்ளைகள் வகுப்பறைகளுக்குப் போனாப்புறம் அதிபர் அல்லது டிசிப்பிளின் சேர் கையில பிரம்போட கேற்றடிக்கு வருவாரு. உடம்பே வியர்க்கும். கை காலெல்லாம் நடுங்கும். தொண்டை கட்டிப்போகும். பேச்சே வராது. பிந்தி வந்த காரணத்தக் கேட்பார். கைய நீட்டச் சொல்லி பளீர் பளீர் எண்டு அடி விழும். நினைக்கவே நெஞ்சு நடுங்கியது.

இண்டைக்குப் புதன் கிழமை. முதலாம் பாடம் தமிழ். சுகந்தா ரீச்சர் வருவாவு. அருமையான கற்பித்தல், கனிவான பேச்சு. திட்டமாட்டா அடிக்கமாட்டா. எனக்கு சுகந்தா ரீச்சர் ரொம்பவும் பிடிக்கும். தமிழ்ப்பாடம் மட்டுமில்ல, அழகாகச் சித்திரமும் வரையக்கூடியவதான் ரீச்சர். போன தவணை நடந்த கண் காட்சியில பனங்கூடலுக்கு நடுவால ஒத்தையடிப்பாதை.... முட்டைமுடிச்சுகளோட அகதிகள் போவதும் மேலே குண்டுபோடும் விமானமும் கொண்ட சித்திரம் எல்லார் மனசையும் நெகிழ வெச்சிப் போட்டுது..... கலகலவென்ற மணியோசை உலுப்பி விட்டது.

"பிள்ள றோட்டப் பாத்துப் போ பிள்ள, நித்திரக் கலக்கத்தில போற வாற வாகனத்தில அடிபட்டுச் சாகப் போற....."

என்றபடியே சைக்கிளில் ஒரு பரட்டைத் தலையன் போனான்.

நினைவுகளிலிருந்து விடுபட்டவளாக நடந்தாள். கிஷானி ஹோட்டலில் நூறு, அமுதன் ஜீயெஸ் வீட்டில் இருபது, ஞானசேன ஐயா முப்பது, வசந்தமலர் அக்கா பத்து, எப்படியோ வாளி வெறுமையானபோது,

"அன்ரி நேரமென்ன" என்றாள்,

"ஏழேகால்..." என்ற பதிலால் அதிர்ச்சியடைந்தாள். ஓட்டமும் நடையுமாக வீடுவரும் வழியில் .....

"அடியே பாருடி, ஏஞ்சலா இடியப்பம் வித்துப்போட்டு இப்பதான் போறா.... இண்டைக்கும் அடிதான் வாங்கப்போறா...."

என்றபடியே மாணவிகள் போனார்கள். இந்த வார்த்தைகள் சவுக்கடிகள் போல வலித்தன. பயம் கவியத் தொடங்கிவிட்டிருந்தது. கைகால்களை பரபரவென்று கழுவினாள். வேகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யூனிபோமை அணிந்தபோது அம்மா தட்டில் இடியப்பத்தையும், சம்பலையும் நீட்டினாள்.

"அம்மா ....." சிணுங்கினாள்.

கையில் ஐந்து ரூபா நாணயத்தை தாய் வைத்தபோது வாடிப்போனாள்.

முதுகில் புத்தகப் பையுடன் வீதிக்கு வந்தபோது சீருடைகள் ஒன்றுகூட இல்லை. வேகம்.... வேகம்..... மூச்சு வாங்கியது. தேய்ந்துபோன சப்பாத்து குதிகாலால் அடிக்கடி கழன்று தொலைத்தது. ஸ்கூல் வாசலுக்கு வந்தபோது முன்னைய நிகழ்வுகள் முடிந்து உடற்பயிற்சி நடந்து கொண்டிருந்தது. பிந்திவந்த மாணவர்களை கேற்றடியில் மறித்துவைத்து நின்ற ஏ.எல். அண்ணாமார்களில் ஓர் அண்ணா திரும்பி அவளைப் பார்த்து சிரித்தான். செத்துவிடலாம் போலத் தோன்றியது. அவன் சயன்ஸ் படிப்பிக்கும் கமலேந்திரன் சேரின் மகன். ஏகப்பட்ட சலுகை. பிந்தி வரலாம், முந்திப் போகலாம். அதோ அவனது சைக்கிள் நிற்கிறது. இனிமேல தான் வீட்டபோவான். தங்கையை ஏற்றிக் கொண்டு வருவான். அவள் என்னோடதான் படிக்கிறாள். ஏஞ்சலாவின் பிஞ்சு மனம் ஏங்கிக் கொதித்தது. மற்றையவன் திரும்பிக் கையைக் காட்டினான். மெல்ல மெல்ல பின்வாங்கி இடது புற கட்டிடத்தின் பின்னால் வேகமாக ஓடி வகுப்பறை வாசலுக்கு வந்துவிட்டாள். நிமிர்ந்தாள். கையில் பிரம்புடன் லோகா ரீச்சர். கண்கள் உருள விழித்துப் பார்த்தாள். எட்டிப் பிடித்தாள் ஏஞ்சலாவின் கையை,

"கள்ளச் சனியனே பிந்தி வந்ததுமில்லாம ஒளிச்சிற்று ஓடிவாறியோ....?"

வீசியடித்தாள் பிரம்பால். துடித்துப் போனாள். அதிபரின் அலுவலகம் வரையும் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டுபோய் நிறுத்தினாள். அவரின் முகத்தில் கோபம் கொப்பளித்தது.

பார்வையாலே சுட்டெரித்தார். மழையில் நனைந்த கோழிக்குஞ்சு போல அவள் நடுங்கினாள். அப்போ,

"எக்ஸ்கியூஸ்மீ..."

என்றபடி உள்ளே வந்தாள் வசந்தா ரீச்சர்.

"இவளோ... இவள் தினமும் இதே சீத்து வாரந்தான். கண்ண மட்டும் விட்டுப்போட்டு உரிக்கவேணும். ஆளப்பாரு, கொட்டப்பாக்கு மாதிரி முளிசி முளிசி....."

திட்டல்கள்....

மிரட்டல்கள்......

அதிபரின் பிரம்பு.....

அவளுக்குக் கண்கள் இருட்டியது. காதுகள் அடைத்தன. தலைக்குள் மின்னல் வெட்டியது. "அம்மா..... அம்மா....." என்றபடியே மயங்கிச் சரிந்தாள்.

அதோ அரச ஆஸ்பத்திரியில் மனநோய் சிகிச்சைப் பிரிவில் கட்டிலுக்குக் கீழாக சுருண்டு படுக்கிறாள்..... பரட்டைத் தலை, கிழிந்த சட்டை, பயமும் பீதியும் பரவிக் கிடக்கும் பிஞ்சு முகம். யாரையும் நெருங்க விடுகிறாளில்லை.

"அம்மா..... நான் ஸ்கூலுக்குப் போக மாட்டன்..... அடிக்கவேணாம்..... அடிக்க...... வேணாம் எண்டு சொல்லுங்க. என்ன விடுங்க...., என்ன விடுங்க .... அடிக்க வோணாம்....."

என்று அரற்றிக் கொண்டிருந்தாள். பயம்.... பயம்..... பயங்கரம் மட்டுமே அவளை நிறைத்திருந்தது. கட்டிலருகே இரு கண்களும் கண்ணீர் சொரிய முகத்திலடித்தபடியே அழும் ஏழைத் தாய். அந்தக் கண்ணீர் ஆயிரமாயிரம் கேள்விகளைச் சுமந்து ஊமையாய்க் கரைந்து கொண்டிருந்தது. ■

2013ம் ஆண்டில் உலகில் 22 திருஅவைப் பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 2012ம் ஆண்டில் 13 அருட்பணியாளர்கள் கொல்லப்பட்டனர். 2013ம் ஆண்டில் இவ்வெண்ணிக்கை ஏறக்குறைய இரு மடங்காகியுள்ளது.

## திருஅவைச் செய்திகள்

அமெரிக்காவில் உள்ள கத்தோலிக்கர்களில் 88 விழுக்காட்டினர் திருத்தந்தை பிரான்சிஸ் திருஅவையின் தலைவராகச் செயற்படும் முறையைப் பாராட்டியுள்ளனர் என்று சி.என்.என். ஊடகத்தின் கருத்துக் கணிப்பு ஒன்று அண்மையில் தெரிவித்துள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# வீட்டு மருத்துவம்

## நினைவாற்றலைப் பெருக்கும் வல்லாரை

தினமும் உணவில் ஏதாவது ஒரு கீரையைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பது மருத்துவர்கள் கூறும் அறிவுரை. கீரைகளில் பொதுவாக நார்ச்சத்தும் இரும்புச் சத்தும் அதிகமுண்டு. நினைவாற்றலைப் பெருக்குவதில் வல்லாரைக் கீரை தனிச் சிறப்பு வாய்ந்தது. இவை ஏரி, குளக் கரை, குட்டை, வாய்க்கால், வேலி ஓரங்கள் என்று நீர்ப்பரப்பு பரவலான இடங்களில் வளர்ந்து காணப்படும். தற்போது, இதன் பயனுணர்ந்தோர் வீடுகளிலும் வைத்து வளர்க்கின்றனர்.

இதனைச் சமைக்கும்போது, புளியைச் சேர்க்கவேண்டாம். புளி வல்லாரையின் சக்தியைக் கெடுத்துவிடும். உப்பையும் குறைவாகத்தான் பாவிக்கவேண்டும். வல்லாரையை நெய்யில் வதக்கி, சிறிதளவு இஞ்சி, வெள்ளைப்பூண்டு சேர்த்து துவையல் செய்து குழந்தைகளுக்குக் கொடுத்துவந்தால் குழந்தைகளுக்கு ஏற்படும் தோல் வியாதிகள், நரம்புக் கோளாறுகள், வயிற்றுப்போக்கு முதலியவை குணமாகும்.

சிலருக்குப் பற்கள் மஞ்சலாகக் கறை படிந்து இருக்கும். வல்லாரைக் கீரையை பற்களின் மீது வைத்துத் தேய்ப்பதனால் மஞ்சள் போவதோடு, பற்களும் வெண்மையாகும்.

வல்லாரைக் கீரையை அளவோடு உண்ணவேண்டும். அளவுக்கதிகமாகச் சாப்பிட்டால் மயக்கம், தலைச்சுற்று ஏற்படலாம். உடல் வலியும் ஏற்படலாம். எனவே, இக்கீரையைக் கிழமைக்கு ஒருமுறை அல்லது பத்து நாட்களுக்கு ஒருமுறை உண்பதே நல்லது.

வல்லாரைக் கீரை ஆயுளைப் பெருக்கும். இரத்தத்தைச் சுத்தப்படுத்தும், மாலைக்கண் நோயைக்குணமாக்கும், மூளை பலப்படும், கை, கால் வலிப்பு நோய்களைக் கட்டுப்படுத்தும், வயிற்றுக் கடுப்பு நீங்கும், காய்ச்சலைப் போக்கும், முகத்திற்கு அழகைத் தரும், மாரடைப்பு வருவதைத் தடுக்கும், யானைக் கால் நோயை வராது தடுக்கும். பெண்களின் மாதவிலக்குப் பிரச்சினைகளைத் தீர்க்கும்.

வல்லாரைக் கீரையை உணவில் சேர்த்துக் கொள்ள மறவாதீர்கள். ▪



■ ஆனந்த சித்தன்

### திருஅவைச் செய்தி

மறைந்த நெல்சன் மண்டேலாவுக்கு நினைவஞ்சலிக் கூட்டம் நடத்திய இலங்கையின் கத்தோலிக்கத் திருச்சபை உட்பட பல மதங்களின் பிரதிநிதிகள், 'நெல்சன் மண்டேலாவின் எடுத்துக்காட்டான வாழ்வில் காணப்பட்ட மன்னிப்பு, ஒப்புரவு ஆகிய விழுமியங்களில் இலங்கை மக்கள் வளரவேண்டும்' என கேட்டுக் கொண்டனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**பங்குனி 05ந் திகதி : புனித அல்பினுஸ்**



இவர் பிரிட்டானி எனுமிடத்தில் வாழ்ந்த பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்தார். இளமையிலிருந்தே பக்தியாக வாழ்வதில் மூழ்கினார் எனவும் சொல்லலாம். தக்க காலத்தில் அங்கர்ஸ் எனும் நகருக்கருகிலிருந்த சின்சில்லா என்ற ஊரிலமைந்த மடாலயத்தில் இணைந்துகொண்டார். 1504ம் வருடத்தில் தனது முப்பத்தைந்தாவது வயதிலே மடாதிபதியுமானார். இருபத்தைந்து வருடங்களாக, அங்கர்சின் ஆயராகும் வரை இதை நிர்வகித்தார். 1549ம் வருடம் இவர் மரணிக்கும் வரை ஆயராகத் தன் மறைமாவட்டத்தை ஆட்சிசெய்தார். ஒரு துறவியான இவர் கற்புக்கு ஒரு முன்மாதிரியாவார். இதற்காக விசேடமாகச் செபித்து, உணர்வுகளை அடக்கியாண்டு, இறைவனுக்குக் கீழ்படிந்து வாழ்ந்தார். தன்னை முற்றாக இழந்து, இயேசுவுக்காக மட்டுமே வாழ்ந்தார். ஆயராகத் தன் திருச்சபையை அக்கறையுடன் வழிநடத்தினார். அனைத்திலும் ஒழுங்கை நிலைநாட்டினார். அதேவேளை, அவரது சொந்த வாழ்விலும், தான் துறவியானதிலிருந்தே கடைப்பிடித்துவந்த கற்பு நிறை தூய்மைமிகு வாழ்வையே தொடர்ந்தும் வாழ்ந்தார். இவரது ஏனைய நற்குணங்களுக்குச் சமமானதாக இவரது பணிவு திகழ்ந்தது. இவரை ஓர் உண்மைத் தொண்டராகக் காட்டியது.

**பங்குனி 17ந் திகதி : புனித பற்றிக்**



இவர் பிறந்த இடம், நாள் ஆகியவை நிச்சயமாகத் தெரியவில்லை. எனினும், 389ம் வருடத்தில் பிறந்ததாகக் கூறப்படுகிறது. உரோம-பிரித்தானிய தியாக்கோனான கல்பர்னியஸின் மகனாவார். இவரது பதினாறாவது வயதிலே அடிமையாக அயர்லாந்துக்குக் கொண்டுவரப்பட்டு, கடவுள் நம்பிக்கையற்ற ஒருவனது ஆடுகளை மேய்க்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டார். அங்கு வாழ்ந்த கடினமான வாழ்வின்போதும் இறைவிசுவாசத்தை இழக்கவில்லை. ஆனால், தியானம், செபம் போன்றவை பற்றிய அறிவை பன்மடங்கு பெருக்கிக்கொண்டார். இவ்வாறாக வாழ்ந்த இவர் ஆறு வருடங்களின் பின் அங்கிருந்து தப்பி வீடு திரும்பினார். அங்கிருந்தபோது ஒரு நாள் இவரது கனவில் "நீ திரும்பிச் சென்று அயர்லாந்தை ஒரு கிறிஸ்தவ நாடாக்கு" என இறைவனால் தெரிவிக்கப்பட்டது. எனவே, இவர் திரும்பியதும் லெரின் மடாலயத்திலிருந்து 412ம் வருடத்திற்கும் 415ம் வருடத்திற்குமிடையிலான காலகட்டத்தில் தனக்குத் தேவையான அறிவைக் கற்றுக்கொண்டார். 417ம் வருடம் புனித அமேட்டரின் திருக்கரத்தால் ஒக்ஸரியில் அபிஷேகப்படுத்தப்பட்டார். 431ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வருடத்திலே இவரது மேலாளரால் மறைபரப்புப்பணி இவரிடம் நம்பிக்கையுடன் ஒப்படைக்கப்பட்டது. அதனால், அயர்லாந்து ஆயர் பலேடியசுக்கு உதவியாளராக அனுப்பப்பட்டார். ஆயரின் மறைவுக்குப் பின் இவர் புனித ஜேர்மனுசின் திருக்கரத்தினால் 432ம் வருடம் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பரிசுத்த பாப்பிறை முதலாம் செலஸ்டினின் அனுமதி பெற்று அயர்லாந்து நாடு முழுவதும் பயணத்தை மேற்கொண்டார். எதிர்ப்புகள் தோன்றினாலும் கலங்காது இறை விசுவாசத்தை விதைத்தார். அத்துடன் அரச குடும்பத்திலுள்ள பலரையும் மனமாற்றம் பெற்றிடச் செய்தார். 442ம் வருடம் உரோம் நகரம் சென்ற இவருக்கு பரிசுத்த பாப்பிறை மகாலியோவால் ஆயர்களின் ஒருங்கிணைந்த மன்றத்திற்குரிய தலைமைப் பதவி வழங்கப்பட்டது. அஞ்ஞானப் பாதையில் சென்றுகொண்டிருந்த அயர்லாந்தை கிறிஸ்துவுக்குரிய நாடாக மாற்றிய ஆயர் பற்றிக் பல மடாலயங்களை ஆண்களுக்கும், பெண்களுக்குமாக அமைத்தார். அத்துடன் நாடு முழுவதையுமே பக்திமிகு வாழ்வில் புகழடையக் கற்றுக் கொடுத்தார். இந்நாட்டுத் துறவிகள் இறை விசுவாசத்தை இங்கிலாந்து, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளிலும் பரவச் செய்தனர். தனது செபம் கலந்த கடினமான அப்போஸ்தலிக்க வாழ்வினை முடித்துக்கொண்டு 461ம் வருடம் பங்குனித் திங்கள் பதினேழாம் நாளில் உல்ஸ்டர் மடாலயத்திலிருந்த இந்த மகா தெய்வீகமான மனிதனின் ஆன்மா இறைவனுடன் கலந்தது. ■

## இயேசுசபைத் துறவி

தொடர்.......

இறுதி மூச்சுவரை மட்டக்களப்பையும், அதன் மக்களையும், குறிப்பாக விளையாட்டுத் திறனாளிகளையும், வாழ்வில் நினைத்தபடி வாழ முற்படாமல் இலக்கு நோக்கிப் பயணிக்க விழைபவர்களையும் நெஞ்சார அன்புசெய்து நின்றார்.

மட்டக்களப்புக் கோட்டையை அண்மித்ததாக இருந்த பழம்பெரும் மயான பூமியை ஆலையடிச்சோலைக்கு இடம்மாற்றி அந்த மயான பூமியை, கல்லோயா அபிவிருத்தித் திட்டத் திற்கென அமெரிக்கா வழங்கிய கனரக இயந்திரங்களை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு, ஆழப்படுத்தி, மட்டப்படுத்தி மட்டக்களப்புக்கு ஒரு விளையாட்டுத்திடலை அமைத்துக் கொடுத்த பெருமைக்குரியவர் அவர். அதனால்தான் அந்த மைதானத்திற்கு வெபர் விளையாட்டு அரங்கம் என்று தக்கபடி பெயரிட்டது மட்டக்களப்பு மாநகர சபை.

20.02.2014 அவரது 100வது பிறந்ததினமாகும். அவர் மிகவும் நேசித்த புனித மிக்கேல் கல்லூரியில் தொடங்கி ஒருவருட காலத்திற்குப் பல நினைவு நிகழ்ச்சிகள் மற்றும் வைபவங்கள் மட்டக்களப்பு மண்ணில் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

இதற்கென புனித மிக்கேல் கல்லூரி பழைய மாணவர் சங்கம், மட்டக்களப்பு சிவில் சமூகம், புனித மிக்கேல் கல்லூரி, மைக்கல்மென் விளையாட்டுக் கழகம் மற்றும் யேசுசபைத் துறவிகள் அடங்கியதாக அமைக்கப்பட்டுள்ள குழுவை அருட்தந்தை டொமினிக் சாமிநாதன் அடிகள் முன்னின்று வழி நடத்துகின்றார்.

■ ஆனந்தா ஏ. ஜீ. இராஜேந்திரம் — இணைச் செயலாளர், அருட்தந்தை வெபர் அடிகள் நூற்றாண்டு விழாக் குழு.



☑ இன்றும் உலகில் ஏறக்குறைய 5.70 கோடி சிறுவர்கள் பள்ளிக்குச் செல்லாமலும், தரமான கல்வி வழங்கப்படாததால் 25 கோடி சிறுவர்கள் கல்வியறிவின்றியும் உள்ளனர் என அறிவித்துள்ளார் யுனெஸ்கோ இயக்குனர் இரினா போக்கோவா.

**~ திருத்தந்தையின் உரையிலிருந்து.....**



☑ பொருட்களை மட்டுமல்ல, மனிதர்களையும் எளிதாகத் தூக்கி எறியும் ஒரு கலாசாரத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இவ்வுலகில் வீணாக்கப்படும் உணவு, உலகில் பசியால் வாடும் அனைவரின் பசியையும் ஆற்றுவதற்குப் போதுமானது. **~ துணுக்குச் செய்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மனமாற்றம்

கடவுள் நம்மோடிருந்து நமக்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்கிறார், செய்துகொண்டிருக்கின்றார். அவரை மட்டும் அரணாகக் கொண்டு உண்மை, அன்பு, நீதி, நேர்மை எனும் இறை மதிப்பீடுகளுக்குச் சாட்சியம் பகர்கின்ற வாழ்வாக அமைந்தால் மனித குலத்தில் ஒரு மாற்றம் ஏற்படும். நமது குற்றம், குறைகள் நமது கண்ணுக்குப் புலப்படுவதில்லை. மாறாக, பிறரின் குற்றங்கள், தவறுகள் நம் கண்களிலிருந்து தப்புவதில்லை. முதலில் நம்மை நாமே உணர்ந்து கொண்டு மற்றவர்களின் குறைகளைப் பார்க்க வேண்டும்.

இவ்வுலகில் நாம் என்ன கிடைக்கும் என்ற கேள்வியோடு, எதிர்பார்ப்போடு எதையுமே ஆதாய நோக்கோடு செய்துகொண்டிருக்கின்றோம். உண்மையான சமயத்தைப் பின்பற்றுபவர்கள் தங்கள் உள்ளத்துக்குள் உண்மையைத் தேடுபவர்களாக விளங்கி, பிறரைத் தீர்ப்பிடாது, 'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' எனும் பரந்த நோக்கில் வாழவேண்டும். சமயம் வேறு, வாழ்க்கை வேறு என்ற எண்ணம் கூடாது. வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்ததுதான் சமயம். சில நேரங்களில் சோதனைகள் வேதனைகள் வருவது நம்மைச் சோதிக்கவே என உணர மறந்து வீணாகத் தீர்ப்பிடுகின்றோம். இவற்றை இத்தவக்காலத்தில் நாம் உணர வேண்டும். மனிதம் மதிக்கப்படவேண்டும். மனதிலே மாற்றம் மலர வேண்டும். ஏன்....? நமக்குக் கிடைத்த இவ்வரிய பிறவியைத் தகுந்த முறையில் பயன்படுத்த வேண்டும்.

"அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது" என்பதனை உணர்தல் வேண்டும். எனவே, வாழ்வின் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் தகுந்த முறையில் பயன்படுத்துவோம். மனிதன் மனந்திருந்த வரும்பொழுது இறைவன் இருகரம் நீட்டி அவனை சந்தோஷத்துடன் வரவேற்கின்றார். ஊதாரிப் பிள்ளையின் உவமையின் தத்துவத்தை உணர்ந்தவர்கள்தானே நாம். ஏன் இவ்வாறு வாழ்கிறோம் என்பதனை சிந்தித்துப் பார்ப்போம், செயற்படுவோம், மனமாற்றம் பெறுவோம். இறைவன் விரும்புவதை நிறைவேற்றுவோம். ■



□ சுரேந்திரா பிரதீபா,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி 31.03.2014

பரிசுப் போட்டி

# விவிலியம் கற்போம் – 129

**யோசுவா : 8ம் அதிகாரம் 1–35 திருவசனங்கள்**

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

ஆண்டவர் யோசுவாவிடம் "அஞ்சாதே, கலங்காதே; உன்னுடன் எல்லாப் போர் வீரர்களையும் சேர்த்துக்கொள். ஆயியை நோக்கிப் புறப்பட்டுச் செல்! அந்நாட்டை உன் கையில் ஒப்படைப்பேன். எரிக்கோவுக்குச் செய்ததுபோல் ...................... செய்வாய். நகருக்குப் பின் ஒரு பதுங்கிடம் அமை" என்றார். அவ்வாறே செய்யப்பட்டது. யோசுவா முப்பதாயிரம் போர் வீரர்களைத் தெரிந்து, அவர்களிடம், "நீங்கள் அந்நகரின் பின்புறம் பதுங்கியிருங்கள், நானும் மக்களும் ...................... அருகில் வர, அவர்கள் நம்மைப் பிடிக்க வெளியே வருவார்கள். நாங்கள் ஓடுவோம். நகரிலிருந்து வெகுதூரம் வரை அவர்களைக் கொண்டுவருவோம். நீங்கள் பதுங்கிடத்திலிருந்து எழுந்து நகரைக் கைப்பற்றுங்கள். உடனே அதை எரித்துவிடுங்கள்" என்றார். அவ்வாறே அவர்கள் ...................... ஆயிக்கும் இடையில் பதுங்கினர். யோசுவா காலையில் எழுந்து சென்றார். அவருடன் முதியோரும் போர் வீரரும் சென்றனர். இவர்கள் எல்லோரும் ஐயாயிரம் பேர் ஆகும். யோசுவா அவ்விரவைப் பள்ளத்தாக்கில் கழித்தார். ஆயியின் மன்னன் இதைக் கண்டு நகர மக்களுடன் போரிட வெளியே வந்தான். அவர்கள் ...................... முன் வந்தனர். யோசுவாவும் ஏனையோரும் பாலைவனம் நோக்கி ஓடினர். நகரிலிருந்த மக்கள் அவர்களைத் துரத்தினர். ஆண்டவர் யோசுவாவிடம், "உன் கையிலுள்ள ஈட்டியை ஆயியை நோக்கி ஓங்கு. ஏனெனில், நான் அதை உன் கையில் ஒப்படைப்பேன்" என்றார். யோசுவா அவ்வாறே செய்தார். பதுங்கியிருந்தோர் வேகமாகத் தம் இடத்திலிருந்து எழுந்தனர். ...................... கையை ஓங்கியதும் அவர்கள் வேகமாக ஓடி நகரினுள் புகுந்து அதைக் கைப்பற்றி உடனே எரித்தார்கள். ஆயியின் மக்கள் திரும்பிப் பார்த்தனர். நகரினின்று எழும்பிய புகையைக் கண்டனர். தப்பியோட வாய்ப்பில்லை. ஓடிய இஸ்ரயேல் மக்கள் திரும்பி இவர்கள் மேல் பாய்ந்தனர். ஒருவரும் தப்பிக்காதபடி தாக்கப்பட்டனர். ...................... ஆயியின் மன்னனை உயிருடன் பிடித்து யோசுவாவிடம் கொண்டு வந்தனர். ஆயி மக்கள் அனைவரையும் வாளால் அழித்தனர். ஆண்களும், பெண்களுமாக அன்று இறந்தவர் பன்னிரண்டாயிரம் பேர். ஆயியின் ஆண்கள் எல்லோருமே வீழ்ந்தனர். எல்லாரையும் கொல்லும்வரை யோசுவா ...................... ஓங்கிய கையை மடக்கவில்லை. ஆண்டவர் கூறியபடியே அந்நாட்டைச் சூறையாடினர். யோசுவா ஆயியைத் தீக்கிரையாக்கி, அது என்றென்றும் அழிவின் மேடாகச் செய்தார். அது இன்றுவரை அப்படியே உள்ளது. அவர் ஆயி மன்னனைத் தூக்கிலேற்றினார். ...................... சாய்ந்தவுடன் யோசுவா கட்டளைப்படி அவன் உடலை இறக்கி, நகரின் நுழைவாயிலில் எறிந்து கற்குவியலை எழுப்பினர். அது இன்றுவரை உள்ளது. யோசுவா ஏபால் மலையில் ஒரு பீடம் எழுப்பினார். அது மோசே மக்களுக்குக் கட்டளையிட்டபடி அமைந்தது. அதன்மீது எரிபலிகளையும், நல்லுறவு ...................... ஒப்புக்கொடுத்தனர். அங்கு கற்களின் மீது மோசேயின் கட்டளையை யோசுவா இஸ்ரயேலர் முன்னிலையில் எழுதினார். இஸ்ரயேல் மக்களும், வெளிநாட்டவரும், முதியோர் அலுவலர், நீதிபதிகளுடன் பேழைக்கு முன்னே இரு மருங்கிலும் நின்றனர். லேவியக் குருக்கள் உடன்படிக்கைப் பேழையை ஏந்திக்கொண்டிருந்தனர். பாதிப்பேர் ...................... முன்பும், பாதிப்பேர் ஏபால் மலைமுன்பும், மோசே கட்டளைப்படி ஆசிபெற நின்றுகொண்டிருந்தனர். யோசுவா திருச்சட்டநூலில் உள்ள அனைத்தையும் வாசித்தார். அப்போது பெண்கள், குழந்தைகள், அவர்களிடையே வாழ்ந்த அயலார் ஆகியோரும் உடன் இருந்தனர்.

**விடைகள்:** **பெத்தேலுக்கும், இஸ்ரயேலர், கதிரவன், ஈட்டியுடன், ஆயிக்கும், அராபாவுக்கு, பலிகளையும், கெரிசிம் மலை, யோசுவா, நகருக்கு**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதி அனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அறிவை வளர்ப்போம் - 129

பரிசுப் போட்டி




**(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)**

1. தமிழ்த் தாத்தா என்று அழைக்கப்படுபவர்
(உ.வே. சாமிநாதய்யர் - ஆறுமுகநாவலர் - கி.வா. ஜகந்நாதன்)

2. கர்நாடக இசையின் தந்தையெனப் போற்றப்படுபவர்
(தியாகராஜசுவாமிகள் - புரந்தரதாசர் - வேங்கடமகி)

3. பூமியைச் சூழ்ந்துள்ள வாயுமண்டலத்தின் உயரம்
*(1000 கி.மீ - 900 கி.மீ - 960 கி.மீ)*

4. இலங்கையில் முதன் முதல் உருவான கட்சி
(இலங்கைத் தொழிலாளர் கட்சி - ஐக்கிய தேசியக் கட்சி - இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி)

5. 'ஏற்றமுண்டானால் ..........................'
(முன்னேற்றம் உண்டு - மாற்றமும் உண்டு - இறக்கமும் உண்டு)

6. 'உண்கின்ற பொருள்' என்னும் வாக்கியத்தில் உண்கின்ற என்பது,
(வினையெச்சம் - முற்றெச்சம் - பெயரெச்சம்)

பெயர் : ..............................................................................

முகவரி: ..............................................................................

..............................................................................

**அனுப்பவேண்டிய முகவரி:**
**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம் - 129**
**தொண்டன்**
**அ. பெ. எண் - 44**
**மட்டக்களப்பு.**

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

.................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# போட்டி முடிவுகள்...

## விவிலியம் கற்போம் - 127 விடைகள்

இரண்டாயிரம் அடி, கடந்து, யோர்தானை, எபூசியர், குவியலாக, யோசுவாவிடம், அடையாளமாக, பேழையை, எரிகோ, கில்காலில்.

## அறிவை வளர்ப்போம் - 127 விடைகள்

1. மெகல்லன்
2. குவைத்
3. சுனில் கவாஸ்கர்
4. அப்பென்டிக்ஸ்
5. பூனையாகுமா
6. வாழ்க

## பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS

போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை எவருமே எழுதாததால் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதியோருள் தெரிவான நால்வருக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. பரிசுத் தொகை 200/=

- எஸ். அன்டன் ரொமேஷ்,
  மே/பா. சகாயம்,
  7ம் பிரிவு, கோட்டகொட,
  ஸ்பிரிங்வெளி.
- J. அருணகுமார்
  இல. 19/6, தண்ணீர் கிணற்றடி வீதி,
  பாலமீன்மடு,
  மட்டக்களப்பு.
- மு. வஜ்ரா
  இல. 1/2, நொத்தாரிஸ் ஒழுங்கை,
  புளியந்தீவு, மட்டக்களப்பு.
- மெக்கன்ஸி பீற்றர்ஸ்
  இல. 10, கமிலஸ் வீதி,
  டச்பார்,
  மட்டக்களப்பு.

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி '77 முடிவுகள்

**முதலாம் பரிசு - 400/=**
A. கெனிஷா,
இல. 169/1A, லூர்த்து மாதா வீதி,
பார் வீதி,
மட்டக்களப்பு.

**இரண்டாம் பரிசு - 300/=**
T. அக்ஷனா,
விபுலானந்தர் வீதி,
வாழைச்சேனை.

**மூன்றாம் பரிசு - 200/=**
ஜோண் ஜிதேஷன் ஜெயராஜ்,
# 65/2 திருச்செந்தூர் முருகன்
கோயில் வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மனித உரிமைகள் ஆண்டை முன்னிட்டு

## மட்டக்களப்பு மறைமாவட்ட சமூகத்தொடர்பு நிலையம்

நடத்தும்

# குறுந்திரைப்படப் போட்டி




- போட்டியாளர்கள் பாடசாலை ரீதியாகவும் (அதிபரின் உறுதிப்படுத்தலுடன்), பங்கு ரீதியாகவும் (பங்குத் தந்தையின் உறுதிப்படுத்தலுடன்) போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு படத்தின் கருப்பொருளாக இருக்கவேண்டும்.
- படத்தின் கால அளவு 10.00 நிமிடங்களுக்கு மேற்படாது இருத்தல் அவசியம்.
- குறும்படத்தின் C.D. பிரதி கிடைக்கவேண்டிய இறுதிநாள் 30 ஜூன் 2014.
- நடுவர்களால் தெரிவுசெய்யப்படும் மூன்று படங்களுக்கு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறும் உலகத் தொடர்பு தின விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : இயக்குனர்
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

தொ.பே.: 065 2226486

1ம் பரிசு – 7000/=
2ம் பரிசு – 5000/=
3ம் பரிசு – 3000/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org